பக்கங்கள்:15 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 06 வெள்ளிக்கிழமை 18.02.2022 கதிர் 105

### இனிது ரகசியம் அல்ல!

நிறைவேற்றதிகாரத்தின் உச்சப் பதவியில் இருக்கின்றமையால் தான் என்ன கூறினாலும் அது உத்தரவு என்ற எண்ணம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு. அதனால் தாம் வாயால் என்ன சொன்னாலும் அது சுற்றிநிரூபம்தான் என்று

☞2

# ஜெனிவாக் கூட்டத் தொடர் பெப்ரவரி 28இல் ஆரம்பம்; தப்பிப்பிழைக்குமா கோட்டா அரசு?

## அமுக்கிப் பிடிக்கத் தயாராகிவிட்டது சர்வதேச சமூகம்

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடர் சுவிஸ் நகரான ஜெனிவாவில் இம்மாதம் 28ஆம் திகதி ஆரம்பமாகின்றது. ஏப்ரல் முதலாம் திகதிவரை நடைபெறவுள்ள குறித்த மாநாட்டில் உலக நாடுகளின் மனித உரிமை நிலைவரம் தொடர்பில் விரிவாக ஆராயப்படவுள்ளதுடன், விவாதமும் இடம்பெறவுள்ளது. அத்துடன், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் எழுத்துமூல அறிக்கையும் முன்வைக்கப்படவுள்ளது.

ஆபிரிக்க வலயத்தில் 13 நாடுகள், ஆசிய பசுபிக் வலயத்தில் 13 நாடுகள், மேற்கு ஐரோப்பியாவில் 7 நாடுகள், கிழக்கு ஐரோப்பாவில் 8 நாடுகள் என

☞14



# ஜெனிவாக் களத்தை எதிர்கொள்ளத் தயார்

## அடிபணியத் தயாரில்லை என்று கோட்டா அரசு நேற்று அறிவிப்பு

ஜெனிவாவில் இம்முறை இலங்கைக்கு எதிராக எந்தப் பிரேரணைகளும் கொண்டுவரப்படமாட்டா. எனினும், ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இம்முறை இலங்கைக்கு எதிராக ஏதாவது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டால் அதை எதிர்கொள்ள நாம் தயாராகவே இருக்கின்றோம்.

– இவ்வாறு கோட்டாபய அரசு அறிவித்துள்ளது.

☞14



## 27 பேர் மரணம்

நாட்டில் மேலும் 27 கொரோனா மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு மரணமடைந்த 27 பேரில் 17 ஆண்களும், 10 பெண்களும் அடங்குகின்றனர். அதில் 19 பேர் 60 வயதுக்கு மேற்பட்டோர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 926 ஆக அதிகரித்துள்ளது.

## அப்பாவிகளைச் சிறையில் அடைக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் எதற்கு?

### பேராயர் ரஞ்சித் ஆண்டகை சீற்றத்துடன் கேள்வி



பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும் அல்லது முழுமையாக மாற்றப்பட வேண்டும். ஏனெனில் இந்தப் பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்திக் குற்றவாளிகளைத் தப்பவிட்டு அப்பாவிகளையே ஆட்சியாளர்கள் சிறையில் அடைத்து வருகின்றனர்.

– இவ்வாறு கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை உடனடியாக நீக்குமாறு வலியுத்திமக்களிடம்கையெழுத்துப் பெறும் மனுவில் கொழும்பு பேராயர் கர்தினால்

☞2

## ஆணையாளரின் அறிக்கை இலங்கைக்குச் சவால் அல்ல

### வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் நம்பிக்கை

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளரின் எழுத்துமூல அறிக்கை இலங்கைக்குச் சவாலாக அமையாது என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

☞14



## சமுதித்த வீட்டின் மீதான தாக்குதல்;

### சி.சி.ரி.வி. காணொளி தொடர்ந்தும் ஆய்வுக்கு



ஹிரு தொலைக்காட்சியின் சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீட்டின் மீது தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்ற வெள்ளை வான் தொடர்பில் தகவல்களைப் பெறுவதற்காக அவரது வீட்டில் மற்றும்

☞14

## பக்தர்கள் இன்றி கச்சதீவு திருவிழா

### ஜனாதிபதி உத்தரவு என்கின்றார் டக்ளஸ்

(இ.கலையமுதன்)

கச்சதீவு திருவிழாவில் பங்கேற்க இலங்கை மற்றும் தமிழக யாத்திரிகர்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

☞14

## பஸிலின் டில்லி விஜயத்துக்கு முன் மோடிக்குப் பறந்தது முக்கிய கடிதம்

இலங்கைக்கு இந்தியா வழங்கஇருக்கின்றபொருளதார நிவாரண உதவிப்பொதிக்கு முன்னராக இலங்கைக்கு இந்தியா வழங்கவுள்ள பொருளாதார நிவாரணப் பொதியை முறைப்படுத்துவதற்கு இலங்கையின் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ புதுடில்லிக்குச் செல்லவுள்ள

☞14

## இந்திய மீனவர் ஊடுருவல் பற்றி கேட்டறிந்தார் நோர்வேத் தூதுவர்

(ந.லோகதயாளன்)

இந்திய மீனவர்களின் ஊடுருவல்தொடர்பில்இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ட்ரின் ஜொரான்லி எஸ்கெடல் மன்னார் மாவட்ட அரச அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமேல்லிடம் விவரங்களைக் கேட்டறிந்தார்.



இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் நேற்று மன்னார் மாவட்டத்துக்கு வருகை தந்திருந்தார். இதன்போதே இந்த விடம்

☞14

## மகனைக் கடத்திய தந்தை துப்பாக்கிச் சூட்டில் சாவு!

ஹொரணை – கந்தானப் பகுதியில், பெண்ணிடம் இருந்து சிறுவனைக் கடத்திச் சென்ற சிறுவனின் தந்தை துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்துள்ளார்.

வெல்லப்பிட்டி பகுதியில் சந்தேக நபருக்கும், பொலிஸாருக்கும் இடையே நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் குறித்த நபர் உயிரழந்துள்ளார்.

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய ஹொரண நீலக்க என்ற நபர், மாமியாரின் பொறுப்பில்

☞14



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கூறி, அதற்காக மோசமான விமர்சனங்களை அவர் வாங்கிக் கட்டிக் கொண்டமைவாசகர்களுக்குநினைவிருக்கலாம்.

அதே ஜனாதிபதி, தம்மை வடக்கிற்கான 'கவர்னர் ஜெனரல்' ஆக நியமித்திருக்கின்றார் என்ற நினைப்பு வடக்கு ஆளுநருக்கு.

அரச சார்பற்ற தொண்டர் அமைப்புகளில் பணியாற்றி அந்த அனுபவத்துடன், ஆளுநர் பதவிக்கு வந்த வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுக்கு, அரச நிர்வாக முறைமைகள், ஸ்தாபனக் கோவை விதிகள் போன்றவை அடியோடு தெரியாது. அதனால் முட்டாள்தனமாக முட்டுப்பட்டுப் போய் நிற்கும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன என்று ஏற்கனவே என் பத்தியில் கோடி காட்டியிருந்தேன். வாசகர்களுக்கு நினைவில் இருக்கக் கூடும்.

இப்போது அவர் பண்ணியிருக்கும் இன்னொரு காரியம் சந்தி சிரிக்கும் விவகாரமாகியிருக்கின்றது.

கடந்த 15ஆம் திகதி, ஆளுநரின் செயலாளர் இளமதி சபாலிங்கம், வடக்கு மாகாணத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்களுக்கும் பொறுப்பான பிரதேச செயலர்களுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கின்றார்.

"நீங்கள் கையாளும் விடயங்கள் மற்றும் இலக்கு வைத்து ஆற்றும் விவகாரங்கள் தொடர்பான பட்டியலை ஒவ்வொருவரிடமிருந்தும் தனியாகப் பெற்றுக் கொள்ளுமாறு ஆளுநர் என்னைப் பணித்துள்ளார். ஆகையால் 22ஆம் திகதிக்கு முன்னர் அப்பட்டியல் எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்புங்கள்." - என்ற 'கட்டளை' எல்லா பிரதேச செயலாளர்களுக்கும் பறந்திருக்கின்றது.

அதாவது உங்கள் கடமைப் பட்டியலை ஒப்படையுங்கள் என்ற உத்தரவு இது.

தனக்குக் கீழ் பணியாற்றும் ஊழியரிடம் மேலதிகாரி அப்படி ஒரு பட்டியல் கேட்டால் அதில் நியாயம் உண்டு. அவருக்கு அதிகாரம் உண்டு.

பிரதேச செயலர்கள் யாருக்குக் கீழ் பணியாற்றுகின்றார்கள் என்பதே தெரியாத மாகாண ஆளுநர் எப்படி தமது பொறுப்புக்கள், கடமைகளை நிறைவேற்றப் போகின்றார்?

01.பிரதேச செயலாளர்கள் மத்திய அரசின் பணியாளர்கள். உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் வருபவர்கள். ஆளுநரோ, மாகாண சபை பணியாளர் தொகுதியை கையாளுபவர். தமக்குக் கீழ் வராத அரச ஊழியர்களிடம் அவர்களின் கடமைப்பட்டியலை ஆளுநர் கோருவது அறிவிலித்தனமின்றி வேறு ஏது?

02.பிரதேச செயலரின் கடமைகள், பொறுப்புகள் அவரவர்களாகத் தேர்ந்து கொள்வதில்லை. 1992 ஆம் ஆண்டு பிரதேச செயலக நிர்வாக முறைமையை அப்போதைய ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸா அறிமுகப்படுத்திய போதே பிரதேச செயலர்களுக்கு அதிகாரங்களைக் கையளிப்பது தொடர்பான சட்டம் நிறைவேற்றப்பட்டது. 'அதிகார மாற்றம் (பிரதேச செயலர்களுக்கானது) 1992ஆம் ஆண்டின் 58ஆம் இலக்கச் சட்டம்' - என்ற பெயர் கொண்ட இந்தச் சட்டத்தைப் பார்வையிட்டால் பிரதேச செயலர்களுக்கான அதிகாரம், கடமைப் பட்டியல் எல்லாம் தெளிவாகி விடும். அவர்களுக்குக் கடிதம் எழுதி அவற்றைப் பெற முயற்சிக்கத் தேவையில்லை.

03.பிரதேச செயலர்களை ஆளுநர் கையாள விரும்பினால் கூட, உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் மாவட்ட செயலாளர் மூலமே தொடர்பாடல் வைத்திருக்க முடியும்; வைத்திருக்க வேண்டும். நேரடியாகக் கடிதம் எழுத முடியாது.

04. இக்காரணங்களினால் ஆளுநர் சார்பில் அவரின் செயலாளர் அனுப்பிய கடிதத்துக்குப் பெரும்பாலான பிரதேச செயலாளர்கள் பதிலளிக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அதுதான் முறை. சரியான முடிவு. தமது பதவி நிலைக்குரிய அதிகார வரம்பு புரியாத - எதற்கும் பணிந்து 'செம்பு காவி'களான ஒரு சில பிரதேச செயலர்கள் பதில் அனுப்பித் தங்கள் பதவிக் கதிரையின் பெறுமதியை விற்று அடி பணியக் கூடும்.

எது, எப்படி என்றாலும் முன்னாள் இராணுவ அதிகாரியான ஜெனரல் சந்திரசிறி வடக்கு மாகாண ஆளுநராக இருந்த போது நடந்த ஒரு சம்பவத்தைக் கூறி இந்த விடயத்தை முடிக்கிறேன்.

அந்த நேரத்தில் வவுனியாவில் பெரும்பான்மை இன அரச அதிபர் ஒருவர் பதவியில் இருந்தார். நுவரெலியாவைச் சேர்ந்தவர். சனி, ஞாயிறு வார விடுமுறைகளில் மேலதிகாரிகளின் அனுமதியுடன் ஊருக்குப் போய் விடுவார்.

அச்சமயத்தில் அவருக்கு ஒரு கூட்டத்துக்கு ஆளுநர் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவர் கூட்டத்துக்குப் போகவில்லை. உரிய நேரத்தில் ஆளுநரின் பணியாளர் தொகுதி உறுப்பினர் ஒருவர் அரச அதிபருக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்தார். உடனடியாகக் கூட்டத்திற்கு பிரசன்னமாகுமாறு ஆளுநர் கூறச் சொன்னார் என்ற தகவலை அவர் தெரியப்படுத்தினார்.

"உங்கள் ஆளுநருக்குச் சொல்லுங்கள், நான் அவரின் கீழ் பணியாற்றும் ஊழியன் அல்லன். உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நேரடிப் பணியாளன். என்ன விடயம் என்றாலும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருடன் பேசுமாறு உங்கள் ஆளுநருக்குக் கூறுங்கள்." - என்று தெரிவித்து அந்த அழைப்பைத் துண்டித்தார் அந்த அரச அதிபர்.

அவர் மட்டத்தில் ஓர் அதிகாரியிடம் பாடம் படித்தால்தான் - சரியான ஹோட்டலில் சாப்பிட்டால்தான் - இந்த ஆளுநருக்கும் தமது பதவி நிலை அதிகாரம், தொடர்பான மட்டம் உறைப்பாகப் புரியும் என்று நினைக்கிறேன்.

★ ★ ★

கலகம் பிறந்தால்தான் நியாயம் பிறக்கும் என்ற பழமொழி சரி, பிழைக்கப்பால் யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று மிகக் கனகச்சிதமாக நடந்தேறியிருக்கிறது.

பல்கலைக்கழகத்தில் நடந்த, நடக்கின்ற விடயங்கள் பல, புதிய துணைவேந்தராகப் பேராசிரியர் சிறிசற்குணராஜா பதவிக்கு வந்த பின்னர் நல்ல திசை நோக்கி நகருகின்றன என்பது கவனிக்கத்தக்கது.

ஆனாலும் கூட எனக்கென்னவோ இந்த எட்டாம் எண், இந்தத் துணைவேந்தருக்குப் பொருத்தம் இல்லாத ஒன்று என்றே படுகிறது. துணைவேந்தராகப் பதவியேற்ற சில நாள்களிலேயே, 2020 ஆம் ஆண்டு செப்ரெம்பர் எட்டாம் திகதியும் - நேற்றைய தினம் போலவே - அதே மாணவர்களால் துணைவேந்தருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்று, அதிலிருந்து துணைவேந்தர் மீண்டிருந்தார்.

அதைப் போலவே 2021 ஜனவரி 8 ஆம் திகதி, முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை நிர்வாகிகள் இடித்துத் தள்ள, அதனால் ஏற்பட்ட அத்தனை சலசலப்புகளையும் தன் தலை மீது வாங்கிக் கொண்டு, அந்தத் தூபியை அங்கீகார மிக்கதொன்றாக - சட்டப்படி அனுமதி பெற்று அமைத்ததன் மூலம் - சர்வதேச ரீதியான அழுத்தங்களில் இருந்தும் அவர் மீண்டிருந்தார்.

இப்போது - மீண்டும் 8 ஆம் இலக்கத்தில் - பெப்ரவரி 17 ஆம் திகதியான நேற்று பல்கலைக் கழக மாணவர்களால் ஏற்படுத்தப்பட்ட கலகம் ஒன்றுக்குப் பிறகு நியாயம் பிறந்திருக்கிறது.

நேற்றைய சம்பவத்தைக் கவனிப்பதற்கு முன்னர் ஒரு பின்னணித் தகவலை நோக்குவது வாசகர்களுக்கு இன்னும் கொஞ்சம் விளக்கத்தைத் தரும்.

2020 ஆண்டு செப்ரெம்பர் 8ஆம் திகதி மாணவர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது என்றும், அதிலிருந்து துணைவேந்தர் லாவகமாக மீண்டு வந்தார் என்றும் குறிப்பிட்டேனல்லவா? அன்றைய தினம் மாலை மூத்த மாணவர்களுக்கும், இளைய மாணவர்களுக்கும் இளவல்களுக்கு ராக்கிங் கொடுப்பதில் ஏற்பட்ட முரண்பாடு முற்றி, மோதலாக வெடித்திருந்தது. கலைப் பீடத்தின் மாணவர்களைப் போலவே விரிவுரையாளர்களும் தங்களுக்குள்ளே பிளவு பட்டு நின்றமையால் மாணவர்களுக்கிடையிலான கைகலப்பைத் தடுத்து நிறுத்துவதில் அதிகாரிகள் சிரமப்பட்டுக் கொண்டிருக்க, தன்னுடைய அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்த துணைவேந்தர் எந்தவித தயக்கமும் இல்லாமல் களத்துக்குப் போயிருக்கிறார். அந்த நேரத்தில் மாணவர்களுக்கிடையில் தள்ளுமுள்ளுப்பட்ட துணைவேந்தருக்குக் கூட்டத்தோடு கூட்டமாக நின்று மாணவன் ஒருவன் தன் 'கைவரிசை'யைக் காட்டி விட்டான்.

கடுமையான களங்கள் பலவற்றைக் கண்டு, துடுப்பாட்டமாயினும், உதைபந்தாட்டமாயினும் சளைக்காமல் நின்று பிடித்து - கம்பஸ் வாழ்க்கையில் 40 வருட அனுபவத்தைக் கொண்ட - அவருக்கு மாணவர்கள் மத்தியில் பின்னிரவு வரை நின்று பிடித்துச் சமாளிப்பதற்கு முடியாமல் போகவில்லை.

'இராணுவ வி.சி.', 'கோத்தாவின் தெரிவு' என்றெல்லாம் வசைபாடி ஊடகங்களுக்கெல்லாம் பேட்டி கொடுத்தனர் மாணவர்கள். அன்றைய தினமும் எது வித தயக்கமும் இல்லாமல் தன்னையும் மாணவர்கள் குற்றஞ் சாட்டுவதனால் - தானும் சந்தேக நபர் பட்டியலில் இருந்தவாறு - சுயாதீன விசாரணை ஒன்றை நடத்துவதற்கு துணைவேந்தர் வாக்குறுதி அளித்தமையை அடுத்து அன்றைய தினம் அமைதியாகிப் போனது.

அதனைத் தொடர்ந்து பேரவையினால் நியமிக்கப்பட்ட சுயாதீன விசாரணைக்குழு சுமார் 21 மாணவர்களைக் குற்றவாளிகளாக இனங்கண்டு கொண்டதுடன், அவர்களில் 7 மாணவர்களுக்கு எதிராகக் கடுமையான தண்டனைகளையும் பரிந்துரைத்தது.

ஒரு வருட காலத்துக்குப் பல்கலைக் கழகத்தினுள் நுழைவதற்கான தடை, சிறப்பு கற்கை நெறிக்கான தடை, வகுப்புச் சித்திக்குத் தகுதியின்மை, விடுதிகளில் தங்க அனுமதி மறுப்பு மற்றும் மாணவர் ஒன்றியங்களில் பதவி பெறத் தடை ஆகிய தண்டனைகள் விசாரணைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டு, அவை மாணவர் ஒழுக்காற்றுச் சபையினால் பேரவைக்குச் சிபார்சு செய்யப்பட்டு, அவை பேரவைத் தீர்மானங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டன.

எனினும் கடைசித் தண்டனையான மாணவர் ஒன்றியப் பதவி ஒறுப்பு என்பதைத் தவிர மற்ற அனைத்தும் மெள்ள, மெள்ளத் துணைவேந்தரால் பேரவை அனுமதியுடன் விலக்கிக் கொள்ளப்பட்டன.

அந்தத் தீர்மானித்தின் படி, கடுமையான தண்டனை வழங்கப்பட்ட மாணவர்களில் ஒருவர்தான் - முன்னைய பிரச்சினையில் துணைவேந்தருக்குக் 'கைவரிசை காட்டிய' மாணவன்தான் - நேற்றைய பிரச்சினைகள் முழுவதற்கும் காரணம். நேற்றைய கலகத்தின் பின்னர் அவரோடு நின்ற பல மாணவர்களே அதனைப் புரிந்து கொண்டு, நேற்றைய கலகத்திற்கு நியாயம் கிடைக்கக் காரணமாகி விட்டனர் என்று சொல்லப்படுகிறது.

பிரச்சினை சுமுகமாகத் தீர்ந்து விட்டமைக்கான அறிகுறிகள் தென்படுவதால், நேற்றைய குழப்பத்தை ஒட்டிக் கட்டவிழ்ந்த பல குளறுபடிகளை - சின்னத்தனங்களை - இங்கு அம்பலப்படுத்தி, நெருடல்களை மீளக் கிளறி விடாமல், தவிர்த்து விடுகிறேன். தேவையானால் அவை பற்றிப் பிறகு பார்க்கலாம்.

எந்தக் காலத்திலும் மாணவர் ஒன்றியப் பதவிகளைப் பெற முடியாது என்ற தீர்ப்பு வழங்கப்பட்ட ஒருவர் தனக்கு அந்தப் பதவி வேண்டும் என்பதற்காக திடுதிப்பென ஒரு சிறு கூட்டத்தோடு வந்து இத்தனை ஆட்டம் போட்டிருக்கிறார்.

அவரது கூத்தினால் நேற்றுப் பல்கலைக் கழகத்தில் நடைபெறவிருந்த மாணவர்களுக்கான பரீட்சைகள், ஊழியர்களுக்கான நேர்முகத் தேர்வுகள், கருத்தரங்குகள் என அத்தனையும் முடங்கிப் போயின.

எந்த விதமான முன்னறிவித்தலும் வழங்காமல், ஒரு பொதுச் சொத்தின் இயக்கத்தை - உயர்கல்விக் கூடத்தின் செயற்பாட்டை - திடுதிப்பென நிறுத்துவதற்கு ஒரு சிலரால் முடியும் என்றால் நியாயம் எங்கு?

பல்கலைகழக நிர்வாகத்தின் வாக்குமூலப் பதிவுகளுடன் பொலிஸார் நீதிமன்றத்தை நாடியிருக்கின்றனர், பல்கலைக்கழகத்தை மூடிய மாணவர்களுக்கு எதிராக நீதிமன்றத் தடை உத்தரவு எந்நேரமும் வரலாம் என்ற நிலையில், குழப்பம் ஏற்படுத்திய மாணவர் குழு கலைந்து சென்றதாகத் தெரிகிறது. பல்கலை பேரவையின் ஒழுக்காற்று நடவடிக்கைத் தீர்மானத்தின் பிரகாரம் எந்தக் காலத்திலும் மாணவர் ஒன்றியப் பதவிகளைப் பெற முடியாது என்ற தீர்ப்பு வழங்கப்பட்ட மாணவருக்குப் பதவி வழங்கக் கோரும் வலியுறுத்தலைக் கைவிடவும் அவர்கள் இணங்கினர். அப்படியானால் நேற்றைய அவர்களின் இந்த ஆரவாரக் குழப்பங்கள் எதற்கு? எனக்கு விளங்கவில்லை.

- மின்னல் -

## அப்பாவிகளைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மெல்கம் ரஞ்சித் ஆண்டகையும் கையெழுத்திட்டுள்ளார். இது தொடர்பில் அவரிடம் ஊடகங்கள் வினவியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தையடுத்து இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால், தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னமும் நீதி வழங்கப்படவில்லை. குற்றவாளிகளைத் தப்பவிட்டு அப்பாவிகளைச் சிறையில் அடைத்தால் எப்படி நீதி கிடைக்கும்? அதனால்தான் இன்று நாம் சர்வதேசத்திடம் நீதி கோரி நிற்கின்றோம்.

இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தால் வடக்கு, கிழக்கு, தெற்கு என நாடெங்கும் வாழும் மக்கள் பலர் துன்பங்களைச் சந்துள்ளனர். அப்பாவிகளைச் சிறையில் அடைக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் எதற்கு? எனவே, இந்தப் பயங்கரவாதத்தடுப்புச்சட்டம்உடனடியாக நீக்கப்பட வேண்டும் அல்லது முழுமையாக மாற்றப்பட வேண்டும். இதை வலியுறுத்தியே அதற்கான மனுவில் நான் கையெழுத்திட்டுள்ளேன் - என்றார்

**வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவிகள் கோரப்படுகின்றன.

1.சாரதி (Heavy Vehicle)
2.அலுவலக சுத்திகரிப்பாளர்.

**தொடர்பு எண் - 0777113333**
**தொடர்பு விலாசம் - இலக்கம் 218, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.**



காலைக்கதிர் Kalaikkathir

# இறக்குமதி செய்யப்பட்ட ரயில் பெட்டிகளின் இயந்திரங்களை பயன்படுத்த முடியாதநிலை!

## ரயில்வே நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம் தகவல்

இறக்குமதி செய்யப்பட்டுள்ள ரயில் பெட்டிகள் மற்றும் இஞ்ஜின்களை பயணிகள் ரயில் போக்குவரத்து சேவைக்குப் பயன்படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றமையால் அரச நிதி மாத்திரம் வீண்விரயமாக்கப்பட்டுள்ளது என ரயில்வே நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ரயில்வே நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடடவை வருமாறு :-

போக்குவரத்து சேவையின் முன்னேற்றம் தொடர்பிலான மீளாய்வு கூட்டத்தில் ரயில் திணைக்கள பொதுமுகாமையாளர் ரயில் சேவை தொடர்பிலான உண்மை நிலைவரத்தைக் குறிப்பிடவில்லை.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 120 ரயில் பெட்டிகளில் 31 பெட்டிகள் மாத்திரமே பயணிகள் ரயில் போக்குவரத்து சேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

40 ரயில் பெட்டிகள் பயன்பாட்டில் உள்ளன என ரயில்வேத் திணைக்கள பொதுமுகாமையாளர் ஜனாதிபதியிடம் குறிப்பிட்டமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

அத்துடன் 760 கோடி ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள 10 ரயில் இஞ்ஜின்களில் 03 எஞ்சின்கள் மாத்திரமே தற்போது சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினை தொடர்பாக உரிய நடவடிக்கையை முன்னெடுக்குமாறு ரயில்வேத் திணைக்களத்துக்கு பலமுறை அறிவுறுத்தியுள்ளோம்.

இந்தியாவின் கடன் நிவாரண திட்டத்தில் 150 கோடி டொலர் செலவில் மஹவ தொடக்கம் ஓமந்தை வரையிலான ரயில் பாதை அபிவிருத்தி செயற்திட்டத்தின் பின்னணியில் பாரிய மோசடி காணப்படுகிறது. இந்த அபிவிருத்தி செயற்திட்டத்திற்கமைய வடக்கு ரயில் பாதையை இரட்டை ரயில் பாதையாக நிர்மாணிக்க முடியும்.

இருப்பினும் ரயில் திணைக்களம் இலாபமடையும் நோக்கில் இந்தச் செயற்திட்டத்தின் ஊடாக வடக்கு ரயில் பாதையை ஒரு ரயில் பாதையாக நிர்மாணிக்க முயற்சிக்கிறது. இதனூடாக பாரிய நிதிமோசடி இடம்பெறும்.

ரயில் ஆசன ஒதுக்கல் சேவையின் போது பயணிகளிடமிருந்து அறவிடப்படும் கட்டணத்தை 50சதவீதமாக அதிகரிக்க ரயில்வேத் திணைக்களம் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையை வலுவிழக்கச் செய்ய போக்குவரத்து அமைச்சுடன் பேச்சில் ஈடுபடவுள்ளோம்.

ரயில் போக்குவரத்து சேவையைப் பயன்படுத்த பொதுப் பயணிகள் ஆசனம் ஒதுக்கிய பின்னர் அவர்களால் பயணத்தை மேற்கொள்ள முடியாமல் போகும் பட்சத்தில் அவர்கள் ஆசன ஒதுக்கீட்டுக்காக செலுத்திய கட்டணத்தில் 25 சதவீதத்தை ரயில்வேத் திணைக்களம் அறவிட்டு மிகுதி தொகையை மேற்படி பயணிக்கு வழங்கும்.

இவ்வாறு ரயில்வேத் திணைக்களம் அறவிடும் கட்டண சதவீதத்தை 50 சதவீதமாக அதிகரிக்கும் சுற்றறிக்கையை ரயில்வேத் திணைக்கள பொது முகாமையாளர் கடந்த 10ஆம் திகதி வெளியிட்டு அதனை எதிர்வரும் மாதம் 18 ஆம் திகதி முதல் அமுல்படுத்துமாறும் அறிவுறுத்தியுள்ளார். இந்த சுற்றறிக்கையை செயற்படுத்த ரயில்வே நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது. பொதுப்பயணிகளும் இதற்கு எதிர்பை வெளிப்படுத்த வேண்டும் என ரயில் போக்குவரத்து சேவையை பயன்படுத்தும் பயணிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

# பிக்கு ஒருவருக்காக பரீட்சை எழுதிய மற்றொரு பிக்கு கைதானார்!

நடை பெற்றுக்கண்டிருக்கும் உயர் தரப் பரீட்சைகளில், வெலிகம - கொக்மாதுவ பிரதேசத்தின் விகாரை ஒன்றின் பிக்கு ஒருவருக்காக, போலி தேசிய அடையாள அட்டையை பயன்படுத்தி பரீட்சை எழுதிய மற்றொரு பிக்குவை புத்தளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புத்தளம் புனித மரியாள் தமிழ் வித்தியாலய பரீட்சை மண்டபத்தில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை மேற்படி பிக்குவைக் கைது செய்தனர் எனப் பொலிஸார் கூறினர்.

பரீட்சை நிலையத்தில், 4 ஆவது நாளாக அந்த பிக்கு க.பொ.த. உயர் தரப் பரீட்சையின் சிங்களம் - பகுதி 2 பரீட்சை எழுதிக்கொண்டிருந்த போது ஏற்பட்ட சந்தேகத்துக்கு அமைய அவர் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியின் பொறுப்பில் எடுக்கப்பட்டு, பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்தே கைது செய்யப்பட்டுள்ள பிக்கு, பெலி அத்த, இசுருபுர பகுதியைச் சேர்ந்தவர் எனப் பொலிஸார் கூறினர்.

கைதான பிக்குவை, புத்தளம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யவுள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## நிதி நெருக்கடி உச்சக் கட்டத்தில்!

**நாட்டின் பொருளாதாரம் எண்ணிப் பார்க்க முடியாத மோசமான கட்டத்தை அடைந்த பின்னரும், சுதாரித்து மீண்டெழுவது குறித்து சிந்திக்காமல், ஆட்சியாளர்கள் செயலற்றிருக்கின்றனர் என்று கொழும்பு பொருளாதார நிபுணத்துவ வட்டாரங்கள் விசனம் தெரிவிக்கின்றன.**

**பயன்படுத்தக் கூடிய அந்நிய செலாவணிக் கையிருப்பு ஆக வெறும் பத்து கோடி டொலராக (சுமார் இரண்டாயிரம் கோடி ரூபாவாக) வீழ்ந்து விட்டதாக மத்திய வங்கி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

**இவ்வாறு வெளித்தரப்புகளுக்கு வழங்க முடியாமல் துண்டு விழும் பெருந்தொகைக் கொடுப்பனவுகளை எப்படி மேற்கொள்வது, இந்தப் பிரச்சினைகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில், திட்டவட்டான யோசனைத் திட்டம் எதுவுமே அரசிடமோ, நிதி அமைச்சிடமோ, மத்திய வங்கியிடமோ இருப்பதாகத் தெரியவில்லை.**

**இலங்கையைப் பொறுத்தவரை இந்த வருடத்தில் செலுத்த வேண்டிய வெளிநாட்டு கரன்ஸியிலான கடன்கள், பிணை முறிகள், சேமிப்பு முதலீட்டு மீள் செலுத்துகைகளின் பெறுமதி 6.9 பில்லியன் அமெரிக்க டொலர்கள். அதாவது 690 கோடி அமெரிக்க டொலர்கள். இலங்கைப் பணத்தில் சுமாராக ஒன்றரை லட்சம் கோடி ரூபா. இது கடன் தவணைக் கட்டணக் கடப்பாடு ஆகும்.**

**தவிரவும், இந்த வருடத்தில் எரிபொருள்கள், உணவுகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு ஏறத்தாழ இரண்டாயிரம் கோடி அமெரிக்க டொலர் தேவைப்படும் என மதிப்பிடப்படுகின்றது. இது இலங்கைப் பணத்தில் சுமார் நாலரை லட்சம் கோடி ரூபாவாகும்.**

**அதாவது, இந்த வருடத்தில் தனது கடன் தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதி போன்றவற்றுக்கு 26.9 பில்லியன் அல்லது 2 ஆயிரத்து 690 கோடி அமெரிக்க டொலர்கள் அண்ணளவாகத் தேவைப்படுகின்றது. இவற்றின் மொத்தப் பெறுமதி சுமார் ஆறு லட்சம் கோடி ரூபாவாகும். ஒரு கணக்குக்குப் பார்த்தால் தினசரி ஆயிரத்து 650 கோடி ரூபா அபிவிருத்தி அல்லாத இந்த விடயங்களுக்குத் தேவை. அவ்வாறு பார்த்தால் இப்போது கைவசம் இருக்கும் அந்நிய செலாவணி ஒன்றரை நாள்களுக்குக் கூடப் போதாது.**

**அபிவிருத்தி, மேம்பாட்டு நடவடிக்கைகளைப் புறம் ஒதுக்கி விட்டு, மக்களின் இருப்புக்கான தேவைகளை நிறைவு செய்யவும், சர்வதேச கடன்கடப்பாடுகளையும் நிறைவு செய்வதற்கும் இவ்வருடத்தில் சுமார் ஆறு லட்சம் கோடி ரூபா தேவைப்படுகையில் –**

**ஜனவரி கடைசியில் இலங்கையில் கையிருப்பில் இருந் த அந்நிய செலாவணி ஆக 236 கோடி அமெரிக்க டொலர்கள் (சுமார் 5 ஆயிரத்து 200 கோடி ரூபா) மட்டுமே. இதிலும் சுமார் 150 கோடி அமெரிக்க டொலர் சீன கடனுதவித் திட்டத்தின் கீழானது. அதன் மூலம் சீனக் உற்பத்திகளை மட்டுமே கொள்வனவு செய்ய முடியும். பிற விடயங்களைப் பெறமுடியாது.**

**இதேசமயம், பங்களாதேஷிடம் இருந்து கிடைக்கும் 20 கோடி டொலர் தற்காலிகக் கடனும், இந்தியாவிடமிருந்து கிட்டும் இன்னும் 40 கோடி டொலர் தற்காலிகக் கடனுமே இன்றைய நிலையில் எஞ்சியிருக்கும் – வரக்கூடிய – உதவிகள். இவற்றின் பெறுமதி சுமார் 13 ஆயிரம் கோடி ரூபா மட்டுமே.**

**அதாவது, நாட்டின் வழமையான செயற்பாடுகளுக்கும், மக்களின் இருப்பு மற்றும் வாழ்க்கைக்கும் தேவையான விடயங்களை நிறைவு செய்வதற்கு மலை போல நிதி தேவைப்பட, மூக்குத்தூள் அளவு நிதியை வைத்துக் கொண்டு திசை தெரியாது தவிக்கின்றது நாடு.**

**ஆனால் அரசுத் தலைவர்களோ இப்பிரச்சினையை எதிர்கொள்ள மாற்றுவழி தேடுவதை விடுத்து, எதேச்சாதிகார ஆதிக்கத்தை தொடர்வதிலேயே கரிசனையாக இருக்கின்றனர்.**

## வவுனியா வைத்தியசாலையில் சிசு மரணம் விளக்கம் கோரியது சுகாதார அமைச்சு

வவுனியா வைத்தியசாலையில் சிசு ஒன்று மரணமடைந்தமை தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் கோரிக்கைக்கு அமைவாக சுகாதார அமைச்சு விளக்கம் கோரியுள்ளது.

சுகாதார அமைச்சின் மருத்துவ சேவைகள் மேலதிக செயலாளர் வைத்தியர் சுனில் டி அல்விஸ், வவுனியா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்த கடிதத்திலேயே இவ்வாறுவிளக்கம்கோரப்பட்டுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு வவுனியா வைத்தியசாலையின் 7 ஆம் விடுதியில் 2020 டிசெம்பர் 14 ஆம் திகதி பிறந்த குழந்தை ஒன்று மரணமடைந்திருந் தது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் வைத்தியசாலையின் கவனக்குறைவாலேயே தனது குழந்தை மரணமடைந்ததாக ஜனாதிபதி செயலகம், சுகாதார அமைச்சு மற்றும் ஆளுநர் அலுவலகம் என்பவற்றுக்கு முறைப்பாடு செய்துள்ளதுடன், சட்ட நடவடிக்கையையும் முன்னெடுத்து வருகின்றார்.

குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி செயலகத்தின் மூத்த உதவிச் செயலாளர் (பொது செய்திகள்) மல்காந்தி ராஜபக்ஷவிடமிருந்து சுகாதார அமைச்சுக்கு விளக்கம் கோரியும், விசாரணை அறிக்கை கோரியும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இதனையடுத்து சுகாதார அமைச்சால் வவுனியா வைத்தியசாலை பணிப்பாளரிடம் விளக்கம் கோரப்பட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் மருத்துச்சேவைகள் மேலதிக செயலாளர் வைத்தியர் சுனில் டி அல்விஸ் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

மருத்துவ அலட்சியத்தால் தனது குழந்தை இறந்தது என கிடைத்த முறைப்பாடு தொடர்பாக விசாரணை நடத்துமாறு கோருவதுடன், இந்த விடயத்தில் கவனம் செலுத்தி பிரச்சினை தொடர்பான அறிக்கையை மல்காந்தி ராஜபக்ஷவிற்கு பிரதியுடன் எனக்கு அனுப்பவும்.

மேலும், இந்த விடயங்களின் முன்னேற்றத்தை சுகாதார அமைச்சு வாராந்தம் ஜனாதிபதி செயலக அலுவலகத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டியிருப்பதால், ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமை அல்லது அதற்கு முன்னர் ஒவ்வொரு விடயத்தின் முன்னேற்றத்தையும் மேலதிக செயலாளரின் அலுவலகத்துக்கு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இதனை அதிக முன்னுரிமையாகக் கருதுங்கள் எனவும் வவுனியா வைத்தியசாலை பணிப்பாளருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியா வைத்தியசாலையில் கடந்த ஆண்டு அதிக சிசு மரணங்கள் இடம்பெற்றுள்ளன எனத் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் இந்த விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளூர் துப்பாக்கியுடன் இளைஞர் ஒருவர் கைது!

மட்டக்களப்பு ஆயித்தியமலை பிரதேசத்தில் உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கியுடன் 24 வயது இளைஞன் ஒருவரை கைது செய்துள்ளோம் என ஆயித்தியமலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

விசேட புலனாய்வுப் பிரிவுக் குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து ஆயித்தியமலை பொலிஸ் பிரிவிலுள்ள கற்பானை காட்டுப் பகுதியை பொலிஸார் சுற்றி வளைத்து சோதனையிட்டபோது உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கி ஒன்றை வைத்திருந்த இளைஞன் ஒருவரைக் கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர் 24 வயதுடைய இளைஞன் எனவும் இவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத் துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆயித்தியமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முல்லைத்தீவுக் கடற்படையினருக்கு படகு வெளியிணைப்பு இயந்திரங்கள்!





தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் ஊடாக முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு வழங்கப்பட்ட படகு வெளிஇணைப்பு இயந்திரங்கள் இரண்டு மாவட்ட அரசாங்க அதிபரால் கடற்படையினருக்கு வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

படகு வெளிஇணைப்பு இயந்திரங்கள் கடற்படையினருக்கு கையளிக்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

5 லட்சம் ரூபா பெறுமதியான படகு வெளி இணைப்பு இயந்திரங்கள் இரண்டு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தால் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 71 கிலோமீற்றர் நீளம் கொண்ட கடற்கரை பிரதேசமும் தாழ் நில பிரதேசங்களும் காணப்படுகின்றன.

கடல் மற்றும் தரை நீருடன் தொடர்புடைய அனர்த்தங்கள் நிகழும் பொழுது அதில் இருந்து மீட்பதற்கான செயற்பாட்டுக்காக இந்த இரண்டு இயந்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் கடந்த காலங்களில் அனர்த்தங்கள் ஏற்படும் போது கடற்படையினரின் உதவியுடனேயே மீட்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக மழை வெள்ளத்தின் போதும் கடற்படையினரின் உதவியுடன் படகுமூலம் மக்களை மீட்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மாவட்ட ரீதியாக ஏற்படும் அனர்த்தத்துக்கு முன்னுரிமையளித்து இரண்டு படகு வெளி இணைப்பு இயந்திரங்கள் இரண்டும் கடற்படையினருக்கு வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் எஸ்.லிங்கேஸ்வரகுமார் மற்றும் வட்டுவாகல் கடற்படை முகாமின் அதிகாரி ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# காணாமல்போனோர் குடும்பத்துக்கு தேவையானதை செய்ய அரசு தயார்!

## உயிரை மீளத் தருமாறு கேட்பதில் பயனில்லை என்கிறார் நீதியமைச்சர்

எம்மைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனாக இருந்தாலும் கூட அவரது குடும்பத்திற்கு அவர் ஓர் உறுப்பினர். அவரது மரணம் கூட அவரது குடும்பத்துக்கு இழப்பு ஏன்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அதனால்தான் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க நினைக்கின்றோம் என நீதி அமைச்சர் அலி சப்றி தெரிவித்துள்ளார்.

யுத்த காலகட்டத்தில் தமிழர் தரப்பில் பலர் காணாமல் போயுள்ளனர் என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால் அவர்களின் உயிரை மீண்டும் தாருங்கள் என கேட்டால் எம்மால் கொடுக்க முடியாது.

ஆகவேதான்இந்தப்பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தில் பாதிக்கப்பட்ட தரப்பின் பக்கம் அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்து தீர்வுகளை வழங்க முயற்சிக்கின்றோம். காணாமல்போனோரின் குடும்பத்தினருக்கு செய்ய வேண்டிய அனைத்தையும் செய்து கொடுக்க அரசாங்கமாக நாம் தயாராக உள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வார இறுதி பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவித்த அவர் –

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் இன்று வரை எண்ணிக்கை தொடர்பாக உறுதியான தகவல்கள் எவையும் இல்லை. ஒவ்வொருஎண்ணிக்கையைக் கூறிக் கொண்டுள்ளனர். யுத்த கால கட்டத்தில் குறித்து ஓர் எண்ணிக்கையானோர் காணாமல் போயுள்ளனர் என்பதை நாம் மறுக்கவில்லை. அதே போல் பாதுகாப்புப் படைகளில் இருந்தும் நான்காயிரத்துக்கும் அதிகமானவர்கள் காணாமல் போயுள்ளனர்.

பாதுகாப்புத் தரப்பிடம் இது தொடர்பான பதிவுகள் இருக்கின்ற காரணத்தால் அவர்கள் தொடர்பான தகவல்களைத் தெரிவிக்க முடிந்துள்ளது.

பாதுகாப்புப் படைகளில் இருந்தே நான்காயிரத்துக்கும் அதிகமான எண்ணிக்கையானோர் காணாமல் போயுள்ளனர் என்றால் அதே எண்ணிக்கையில் அல்லது அதற்கும் அதிகமானோர் விடுதலைப்புலிகள்தரப்பிலும்காணாமல் போயிருக்க வேண்டும் என்பதே உண்மை.

இது யுத்தம். இதில் நிராயுதபாணியாக இருந்த ஒரு தரப்பை இராணுவ ஆயுதத்தால் கட்டுப்படுத்தியதாக கூற முடியாது.

விடுதலைப் புலிகளும் மிகப் பலமான சகல ஆயுதக் குழுக்களையும் கொண்ட அமைப்பாக இருந்தனர். ஆகவே பலமான இரண்டு தரப்புக்கு இடையிலான நேரடி யுத்தமொன்றே இங்கு இடம்பெற்று முடிந்துள்ளது.

இந்த யுத்தத்தில் தமிழர் தரப்பில் பலர் காணாமல்போயிருக்கலாம். அவர்களின் உயிரை மீண்டும் தாருங்கள் எனக் கேட்டால் எம்மால் கொடுக்க முடியாது. ஆகவே தான் இந்தப் பிரச்சினைகளை ஒரு முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தில் பாதிக்கப்பட்ட தரப்பின் பக்கத்துக்கு அதிக முக்கியத்துவத்தைக் கொண்டுவந்து தீர்வுகளை வழங்க முயற்சிக்கிறோம். ஆனால் இதனைத் தமிழர் தரப்பு நிராகரித்துக் கொண்டு காணாமல் போனவர்களின் உயிரைத் தாருங்கள் என்று கேட்டால் அவ்வாறு கொடுக்க முடியாது.

இதனை வைத்து அரசியல் செய்து கொண்டிருக்காது இந்தப் பிரச்சினைகளில் இருந்து வெளியில் வருவதுடன் பாதிக்கப்பட்ட தரப்பினரின் தேவைகளைப் பூர்த்திசெய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். காணாமல் போனோரின் குடும்பத்தினருக்கு செய்ய வேண்டிய அனைத்தையும் செய்து கொடுக்கத் தயாராக உள்ளோம்.

இழப்பீடுகளை, மரண சான்றிதழை வழங்கத் தயாராகவே உள்ளோம். யுத்தத்துக்கு முகம்கொடுக்கும் வேலையில் இரண்டு தரப்பிலும் இழப்புக்கள் ஏற்படும். இராணுவம்மற்றும்புலிகளைத் தவிர்த்து பொதுமக்களும் இந்த யுத்தத்தில் காணாமல் போயிருப்பார்கள் என்பதை நானும் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் இதனையே எத்தனை காலத்துக்குப் பேசிக் கொண்டு இருக்க முடியும்.

பேசிக் கொண்டே இருந்தால் எப்போதுதான் முடிவு காண்பது. ஆகவே, நடந்ததை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் உயிரை மீண்டும் தர முடியாது. யார் காணாமல் போனவர்கள் என்ற தகவல்களை எமக்குத் தாருங்கள்.

அவர்கள் தொடர்பில் நாம் விசாரணைகளை நடத்தி அதன் பின்னர் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம். எம்மைப் பொறுத்தவரை பிரபாகர னாக இருந்தாலும் கூட அவரது குடும்பத் துக்கு அவர் ஓர் உறுப்பினர். அவரது மரணம் கூட அவரது குடும்பத்திற்கு இழப்பு ஏன்பதை நாம் ஏற்றுக் கொள்கின் றோம். அதனால்தான் இந்த பிரச்சி னைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க நினைக்கின்றோம். –எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை திருத்தும் சட்டமூலத்துக்கு எதிராக அம்பிகாவும் மனு



இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

பயங்கரவாதச் தடை சட்டத்தை திருத்தும் சட்ட மூலம் அடிப்படை உரிமைகளை மீறுவதாகத் தெரிவித்தே உச்ச நீதிமன்றத்தில் அவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

பயங்கரவாதத் தடை சட்டத்தை திருத்தும் சட்ட மூலம் இலங்கையின் அரசமைப்பின் 3, 4, 11, 12(1), 13(1), 13(3), 13(4), 13(5), 138 அல்லது 141 ஆகிய சட்டங்களுக்கு முரணானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அடிப்படை உரிமைகளுக்கு முரணாக சட்டம் கொண்டுவருவதென்றால் அது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனும், சர்வஜனவாக்கெடுப்பின்மூலம்தான் கொண்டுவர வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இல்லையெனில், சட்டத்தை அடிப்படை உரிமைகளை மீறாத வழியில் இயற்ற வேண்டும் என்றும்அம்பிகாசற்குணநாதன்தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த சட்ட மூலத்தை சவாலுக்கு உட்படுத்தி பாக்கியசோதி சரவணமுத்துவும் மனுதாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

# மிச்செல் பச்லெட்டின் அறிக்கை நாடாளுமன்ற விவாதத்துக்கு!

## கோருகிறது எதிர்க்கட்சி



இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும் அந்த அறிக்கை மீது விவாதம் நடத்த வேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் வலியுறுத்தி யுள்ளது.

ஊடக சந்திப்பொன்றில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

மிச்செல் பச்லெட்டின் அறிக்கை அரசாங்கத்துக்கு கிடைத்துள்ளமையை சுட்டிக் காட்டிய அவர், அது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவாதிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை ஊடகவியலாளர்சமுதித்தசமரவிக்ரமவின் வீடு தாக்கப்பட்டமைக்கும், சிவில் செயற்பாட்டாளர் ஹொான் மாலக்க கைது செய்யப்பட்டமைக்கும் அரசாங்கமே பொறுப்பு என்றும் மயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

# குவைத் அரசாங்கத்தின் உதவியுடன் 66 பாலங்களை புனரமைக்க ஏற்பாடு!



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கை திட்டத்தின்கீழ் மக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் நாட்டின் ஏழு மாகாணங்களை உள்ளடக்கிய 66 பாலங்களை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளும் தரப்பு பிரதம கொறடா, அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த 66 பாலங்களை புனரமைக்கும் திட்டத்துக்கு குவைத் அரசு நிதியுதவி வழங்குகிறது. இந்த 66 பாலங்களும் புனரமைக்கப்பட்டு 03 வருடங்களுக்குள் கட்டி முடிக்கப்பட உள்ளன.

தேசிய நெடுஞ்சாலைகளில் இருக்கும் பழைய பாலங்களுக்குப் பதிலாகப் புதிய பாலங்கள் கட்டுவதும், குறுகலான பாலங்களை விரிவுபடுத்துவதன் மூலம் பாலங்களைப் பயன்படுத்தும் பயணிகளின் பயண நேரத்தைக் குறைக்கவும் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

வெள்ளம் மற்றும் மண்சரிவு ஏற்பட்டால் நாடு பூராகவும் உள்ள வீதி வலையமைப்பிற்குப் பாதுகாப்பான போக்குவரத்து வசதிகளை வழங்கும் வகையில் தற்காலிக பாலங்கள் அமைக்கப்படும் எனவும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

தேவையான பாலங்களின் விவரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் கட்டம் கட்டமாக அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# அநுராதபுரம் – ஓமந்தை ரயில் பாதைக்குப் பூட்டு!

அநுராதபுரம் - ஓமந்தை ரயில் பாதை மார்ச் 5 ஆம் திகதி முதல் ஐந்து மாதங்களுக்கு மூடப்படும் என ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்படி ரயில் பாதையைத் திருத்தியமைக்க வேண்டும் என்ற அங்கீகாரம் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பயண நேரத்தை சுமார் 40 நிமிடங்கள் குறைக்கும் நோக்கில் இந்த சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார்.

மார்ச் 5 ஆம் திகதி முதல் கொழும்பில் இருந்து அநுராதபுரத்துக்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்கும் மாத்திரம் ரயில்கள் இயக்கப்படும்.

அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் வரை பஸ் சேவையொன்று சம்பந்தப்பட்ட இடங்களுக்கு அருகில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



- மகாதேவஐயர் ஜெயராமசர்மா -
(மேனாள் தமிழ் கல்வி இயக்குநர்,
மெல்பேண், ஆஸ்திரேலியா)

# வள்ளுவம் சொல்லும் வாழ்வியல் முறைகள்

## திருவள்ளுவர் குருபூசைத் தினம் இன்றாகும்

தமிழிலே தோன்றிய பல நூல்கள் வாழ்வியலைப் பற்றிய கருத்துக்களை பலவாறு எடுத்துக்காட்டி இருக் கின்றன. அவை கூறும் கருத்துக்கள் முழுமையான வையாகவே எக்காலத்துக்கும் ஏற்றனவாகவோ இருக் கின்றனவா என்று பார்க்கின்ற பொழுதுதான் திருக் குறளை நாம் கூர்ந்து பார்க்க வேண்டியுள்ளது. வாழ் வியல் சம்பந்தமான கருத்துக்களைப் பகர்ந்து நின்ற நூல்களுக்கு மத்தியில் திருக்குறள் ஒன்றோ முன்னுக்கு நிற்கிறது என்பதே பலரதும் கருத்து.

நூல்களை இரண்டு வகையாகப் பார்க்கலாம். அந்தந்தக் காலத்துக்கு ஏற்றவை, எக்காலத்துக்கும் ஏற்றவை என்று வகைப்படுத்தலாம்.

இதேவேளை நூல்களைக் கற்கும் வகையிலும் இருவகைப்படுத்தலாம். முதலாவது எழுதிய காலத்துக்கே சென்று கற்பது. மற்றையது வாழும் காலத்திற்கு வந்து கற்பதாகும். இந்த வகையில் வள்ளுவமானது வாழும் காலத்திலேயே கற்கும் நூலாக விளங்குகின்றது. ஆகையால்தான் பல ஆயிரம் வருடங்களுக்கு மேலாக வாழ்க்கைக்கு வழிகாட்டும் வாழ்வியல் நூலாக விளங் கும் பெருமையை அது பெற்றிருக்கிறது.

திருக்குறள் தான் தோன்றிய காலம் முதல் இன் றளவும் தனித்துவம் மிக்கதாகவே விளங்குகிறது என் பதை எவருமே ஒத்துக் கொள்ளுவர். அந்த அளவுக்கு அதன் அமைப்பும், அதில் சொல்லப்பட்ட கருத்துக்க ளும் இருக்கின்றன. பகவத்கீதை வாழ்வுக்கு வழிகாட்டி தான். திருக்குரான் வாழ்வியலைக் காட் டும் கருத்துக் கள் கொண்டதுதான். பைபில் கூட வாழ்வியல் கருத் துகள் காணப்படுகின்றன.ஆனால் இவை யாவும் சம யம் சார்ந்தனவாக இருக்கின்றன.

கடவுள் மனிதனுக்குச் சொன்னது கீதை. மனி தன் கடவுளுக்குச் சொன்னது திருவாசகம். மனிதன் மனிதனுக்குச் சொன்னதுதான் வள்ளுவம். ஆகவே தான் திருக்குறள் எந்தவிதச் சமயச்சார்பும் கலவாத சமுதாயச் சிந்தனை மிகுந்த நூலாக இருக்கிறது. கூறப்படும் சிந்தனைகளும் யாராலும் கூறப்படாதன வாகவும், புரட்சிகரமானவையாகவும்,புதுமையானவை யாகவும் இருக்கின்றன.

ஒரு நூல் எழுதப்பட்ட காலத்தில் கூறப்பட்ட கருத்துக்கள் சிலகாலத்துக்கு மட்டுமே பொருந்துவன வாகவே பெரும்பாலும் இருக்கும். சிலவேளை எழு தப்பட்ட காலத்தோடே அக்கருத்துக்களும் வலுவிழந்தும் கூடப் போய்விடலாம். அப்படியான நூல்கள் நிலைத்து நிற்பது என்பது கடினமானதாகவே இருக்கும். ஆனால் எழுந்த காலம் தொடக்கம் இன்றுவரை - ஏன் இன்னும் பலகாலங்களுக்கும் - நிலைத்து நிற்கும் அளவுக்குச் சிந்தனைக் கருவூலங்களைத் தன்னகத்தே கொண் டிருக்கும் பெருமையைத் திருக்குறள் நூல் பெற்றிருப் பதால்தான் அது வாழும் நூலாக, வாழ்வியலைக் காட்டும் நூலாக இருக்கிறது என்பதை யாவருமே ஏற் றுக் கொள்வார்கள்.

உண்டோம், உடுத்தோம், உறங்கினோம் என்பது வாழ்க்கையல்ல. வாழ்க்கை என்பது இவற் றுடன் அடங்கி விடுகிறது என்னும் அபிப்பிராயம் பெரும் பாலும் எம்மிடையே காணப்படுகிறது. விலங்களும் சாப்பிடுகின்றன. உறங்கிவிடுகின்றன. நாமும் அப்ப டியிருந்தால் அதன் அர்த்தம்தான் என்ன? மனிதன் என்றால் அவன் சிந்திக்கத் தெரிந்தவன். பகுத்தறியும் தன்மை பெற்றவன். அவன் வாழ்வும் விலங்கு வாழ்வும் ஒன்றாகுமா?

எனவே மனிதனது வாழ்வு இப்படித்தான் வாழவேண்டும் என்னும் நிலைக்குள் இருந்து விட்டாது அங்கு வாழ்வியலைப் பார்க்க முடியும். இப்படித்தான் வாழ வேண்டும் என்பதற்குப் பல வழிகளைத் தேர்ந்து அவற்றை வழங்கி நிற்பதால் தான் வள்ளுவம் மிகச்சிறந்த வாழ்வியல் நெறியாகி நிற்கிறது.

வள்ளுவம் காட்டும் வழிகளை உலகிலுள்ள அனைவரும் கடைப்பிடித்தால் மிகவும் உன்னத மான வாழ்வு அவர்களுக்குக் கிடைத்துவிடும். யாவ ரும் அறத்தின் வழியில் வாழுதல் வேண்டும். அறத் தின் வழியில் பொருள் தேடுதல்வேண்டும். அறத்து டன் அன்பினையும் இணைக்கவேண்டும். அறமும் அன்பும் இணையும்வேளை அத்துடன் ஒழுக்கத்தை யும் சேர்த்துவிடல் மிகவும் முக்கியம் என்பதுதான் வள்ளுவத்தின் தத்துவம்.

### வாழ்வியல் முறைகள்

எப்படியும் வாழலாம் என்று மனம்போன போக் கிலே வாழ்ந்தால் வாழ்க்கை வாழ்க்கையாக இருந்து விடாது. வாழ்வென்றால் அதற்கு ஒரு நோக்கம் இருக்க வேண்டும். குறிக்கோள் அற்ற வாழ்க்கை குருட்டு வாழ்க்கையாகும். சிந்திக்கும் ஆற்றல் மனிதனுக்குக் கிடைத்திருக்கும் பெரும் வரப்பிரசாதம். பகுத்தறியும் பாங்கு என்பது மனிதனை மாநிலத்தில் உயர்த்தி வைப்பதற்குக் காரணமாய் இருக்கின்றது.

விலங்காக மனிதன் விலங்குகளுடன் காட்டில் இருந்த நிலையைக் கடந்து நாட்டில் நாகரிகமாக வாழும் நிலைக்கு வந்துவிட்ட பின்னரும் கூட மனி தனாக வாழ எண்ணாவிட்டால் மனிதவாழ்வுக்கே அர்த்தம் இல்லாமல் போய்விடும் அல்லவா? எனவே கல்வியியும், கற்றலும், வாழ்வியலில் மிகவும் முக்கியத் துவம் பெறுகின்றன என்பதுதான் வள்ளுவத்தின் நிலைப்பாடாகும். கல்வி என்றால் என்ன என்பதை முதலில் தெரிந்துகொள்ளுதல் அவசியமானதாகும். கல்வி பற்றி நோக்கங்கள் பல சொல்லப்பட்டாலும் - அதன் பிரதான நோக்கம் - சுயசிந்தனையும் மனித நேயமிக்க மனிதனை உருவாக்குவதுமேயாகும் அதனூடாக தெள்ளிய அறிவு, நன்னடத்தை, மனிதத் துவம், இறைபற்றிய உணர்வு ஏற்படுகிறது என்பது தான் முக்கிய அம்சமாகும்.

இவற்றை எல்லாம் உள்வாங்கிய வள்ளுவம் முதலில் என்ன சொல்லுகிறது என்றால் கற்க என்று தொடங்குகிறது. கற்க என்ற பொழுதே எம்மிடம் ஒரு விழிப்பு ஏற்படுமல்லவா? அது எப்படியிருக்கும் என்று ஆராயும் எண்ணம்கூட ஏற்படலாம் அல்லவா? அதன் பின்னர்தான் அடுத்து என்னதான் இருக்கிறது என்ற ஆவலை எம்மிடத்தில் உருவாக்கி, கசடற என அடுத்த நிலையை வள்ளுவம் காட் டிய பின்னர் எவற்றைக் கற்கவேண்டும் என்பதை, கற்பவை என்று வரையறுத் துச் சொல்லிய பின்னர், மிகவும் முக்கியமான இடத் துக்கு வள்ளுவம் வந்து நிற்கிறது. அதாவது, கற்றபின் நிற்க அதற்குத் தக கற்று முடித்து விட்டால் மட்டும் போதாது, கற்கும் பொழுது எவற்றையெல்லாம் கற் றோமோ அதன்படி வாழ்வை அமைத்து வாழுவது தான் கற்றதன் பயன்பாடு என்று நிறைவாக இந்த வரிகளால் வள்ளுவம் காட்டி நிற்கிறது.

இங்கே சுட்டப்பட்ட வழிகள் கல்வி உளவியல் சார்ந்ததாகும். தூண்டலும் அதைத் தொடர்ந்து நல்ல துலங்குதலும் கல்வியால் அதுவும் நல்ல கல்வியா லும், கற்றலாலும் ஏற்படும் என்பது கல்வியியலாளர் களின் எண்ணமாகும். அந்தக் கல்விச்சிந்தனை வாழ் வியல் வழியுமாகும் என்று இரண்டாயிரம் வருடங்க ளுக்கு முன்பே தெரிந்து வைத்திருந்து எங்களுக்குத் தந்த வள்ளுவத்தின் சிறப்பை எண்ணெயெண்ணிப் பெருமைப்பட்டுக் கொள்ளுதல் வேண்டுமல்லவா!

கல்விபற்றிய வள்ளுவத்தின் பார்வை குறுகிய பார்வையல்ல. அது உலகம் தழுவியதாகும்.இது ஒரு பொதுப்பார்வை எனலாம். கற்பது, தேர்ந்து கற்பதும், அதன் வழி வாழ்வில் நடப்பதும் என்பவை யாவருக் கும் ஏற்றவையே! இந்தக் கருத்தியலில் மொழி யில்லை, மதம் இல்லை, இனம் இல்லை, நாடு கூட சுட்டப்படவில்லை. இந்த வகையான வாழ்வியல் முறையக. கூறிய வகையால் உலக நூல்களில் வள் ளுவம் உயர்ந்தே நிற்கிறது.

பல நூல்கள் - இயற்கை, வீரம், காதல், வெற்றிச் செய்திகள், சமயக் கோட்பாடுகள் என்னும் ரீதியில் பொதுமைக் கருத்துகளை வெளிப்படுத்தி நிற்கின் றமையைப் பார்க்கின்றோம். அப்படியான நூல்கள் உலக மக்கள் அனைவருக்கும் பொருந்துமாறு பொது வியல்புகளை பெரும்பாலும் வெளிப்படுத்தும் நிலை யில் அமைந்திருக்கவில்லை. ஆனால் வள்ளுவமோ - அறவியல், அரசியல், பொருளியல், இல்லறவியல், இன்பவியல் என வகுத்து யாவற்றையும் வாழ்வியல் ஆக்கியிருக்கிறது. இதனால் வள்ளுவத்தின் வாழ் வியலானது தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, தமிழினத் துக்கு மட்டுமல்ல, உலக மாந்தர் அனைவருக்குமே பொருந்துவதாக இருக்கின்றது. அறத்துக்கு முதல் வனாகிய இறை வனை முதலாகக் கொண்டுதான் இந்தஉலகம் இயங்குகின்றது என்பதுதான் வள்ளு வத்தின் தொடக்கமேயாகும்.

அகர முதல எழுதெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

## வள்ளுவத்தின் சிறப்பு

இறைமை என்பது இயற்கை. அதனுடைய பொதுமை இயக்கமே அறத்துக்கு முதல் வடிவமாகும். ஆகவே இறைமையே இயற்கை. இயற்கையே அறம். அறமே பொதுமை. பொதுமையே வாழ்க்கை. இவற் றில், வேறுபாடுகள் - மாறுபாடுகள் இருக்கும். ஆனால் உணர்வு எனப்பார்க்கும் பொழுது அது ஒன்றுதான். அதைத்தான் பொதுமை என்கின்றோம். இப்பொதுமை உணர்வு நோக்கியே அனைத்து மக்களது வாழ்க் கையும் இயங்குதல் வேண்டும் என்பதே பொதுமைக் கொள்கைக்கு மூலமும் வேரும் ஆகும் என்பதையே முதற்குறளில் வள்ளுவம் தெளிவாக்கி நிற்கிறது.

கல்விகற்று அதன்படி நிற்கவேண்டும் என்று சொல்லிய வள்ளுவம், கல்வியின் பயனைக் காட்டும் பொழுது இறைவனை உணர்தலும், பணிவதும் என்று வாழ்வாகக் காட்டி நிற்பதும் நோக்கத்தக்கதே. இந்த இடத்தில் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் இந்தமுறையை எப்படி தமக்கு வாழ்வியலாக்க முடி யும் என்றொரு வினாவும் எழுமல்லவா? அதற்காகவே தான் வாலறிவன் என வள்ளுவம் சொல்லி நிற்கிறது. இங்கு எந்தக் கடவுளும் குறிக்கப்படவில்லை. வாலறிவு என்றால் - தூய்மை ஆன அறிவு என்றும் கொள்ள லாம். அதாவது கற்றபின் ஏற்படும் அறிவில் தூய்மை என்பது - அறியாமயை நீக்கி எல்லாவற்றையும் அறி யும் நிலையைப் பெறுகின்ற நிலையாகும். மக்கள், முழுவதையும் உணரும் நிலையை அடைவதையே வாலறிவன் (இறைவன்) எனக் குறிப்பிடுவதால் நாத்தி கம் பேசுகின்றவர்களுக்கும் வள்ளுவத்தின் இந்த வாழ்வியல் முறை பொருந்தியதாகவே இருக்கிறது.

(07ஆம் பக்கம் பார்க்க)

# வள்ளுவம் சொல்லும் ......

(ப6ஆம் பக்கத் தொடர்ச்சி)

வள்ளுவம் கடவுளை நம்புகிறது. அது ஆணுமல்ல, பெண்ணுமல்ல. வள்ளுவத்தின் கடவுளுக்குக் கோபுரங்களும் இல்லை. கோட்டைகளும் இல்லை. வள்ளுவத்தின் கடவுளுக்குக் கணக்குமில்லை. வழக்குமில்லை. அதற்குப் பெயர் பேரறிவு! தூய்மையான அறிவு! குணங்களின் திரு உரு! இன்பத்தின் திரு உரு! அன்பின் திரு உரு! அறத்தின் திரு உரு! இதனை ஆஸ்த்திகரும் ஏற்றுக் கொள்வார்கள். நாஸ்த்திகரும் ஏற்றுக் கொள்வார்கள். இது தான் பொதுமையான வாழ்வியல் நெறியாகும். இதனை இன்றைய நிலையில் யாவரும் ஏற்றுக்கொள்வார்கள் அல்லவா?

தூய்மையான அறிவு வந்தால் அங்கே நல்லறமும் இணையவேண்டும். அறம்தான் யாவற்றுக்கும் அத்திவாரமாகும். அறத்துடன் இணைந்து வாழ்வு அமைந்துவிட்டால் ஆனந்தம் அங்கே அமர்ந்தே இருந்துவிடும். செயல்கள் அனைத்துக்கும் சிந்தனையே அடிப்படையாகும். சிந்தனையின் நிலைக்களனாக இருப்பது மனமாகும். நாம் செய்யும் செயல்கள் பலவற்றில் தூய்மை காண வேண்டும் என்று தனித்தனியாக முயல்வதைவிட செயல்கள் அனைத்திற்கும் பொறுப்பாக உள்ள சிந்தனையைத் திருத்தி, மனத்தை மாசின்றி வைத்துக் கொள்ளுவதுதான் நல்லதும் சிறந்ததுமாகும்.

இதைத்தான் "மனதுக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் என்று வள்ளுவம் தொட்டுக் காட்டு கிறது. மனத்திலே மாசு இல்லாவிட்டால் அதுவே மிகச்சிறந்த அறம் என்னும் வாழ்வியல் முறையை வள்ளுவம் காட்டுவது உலகத்துக்கே உகந்ததாகும். இன்றைய நிலையில் மனத்திலே ஏற்படும் அழுக்கினால்தான் எங்கு பார்த்தாலும் சண்டையும் சச்சரவுகளும் மலிந்து காணப்படுகின்றன. சாந்தியும் சமாதானமும் காண்பதென்பது முயற்கொம்பாக இருக்கிறது.

அரசியல் செய்பவர்கள், படித்துப் பட்டம் பெற்று பல பதவிகள் வகிப்பவர்கள், வைத்தியத்துறை சார்ந்தவர்கள், நீதித்துறையில் உள்ளோர்கள் யாவருமே மனத்தில் மாசுள்ளவராக விளங்குவதால் மனிதவாழ்வே அர்த்தமற்ற தாகிவிடுமோ என்னும் பயமே தோன்றி இருக்கிறது. இந்த அவலம் மாறவேண்டுமானால் அனைவருமே வள்ளுவத்தின்படி மனத்துக்கண் மாசில்லாமல் வாழுதல் அவசியமானதாகும்.

மாசற்ற மனம் யாவருக்கும் அமையும் பொழுது, நல்ல ஒழுக்கமும் வந்தமையும் நிலையும் எழும். ஒழுக்கும் என்பது உயிரிலும் மேலானது என்பது வள்ளுவத்தின் அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். இதனால் ஒழுக்கத்தை வாழ்வியல் ஆக்கியிருக்கின்றது வள்ளுவம். இந்த ஒழுக்கமானது தனிமனித ஒழுக்கம், சமுதாய ஒழுக்கம், உலகுதழுவிய ஒழுக்கமாகாவும் விரிவடையவல்லது. ஒழுக்கத்தால் என்ன வரும் ? ஒழுக்கத்தால் சிறப்பு வரும்; உயர்வு வரும்; அதனால் ஒழுக்கமானது உயிரிலும் மேலானதாகும் என்று வள்ளுவம் சொல்லுகிறது.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்.

ஆடை அணிகலனோ, பட்டம் பதவிகளோ, வைர வைடூரியங்களோ, பற்பல வாகனங்களோ, மாடி மனைகளோ, பட்டுப் பீதாம்பரங்களோ, மந்திரி. பதவிகளோ, சிறப்புத்தரமாட்டா. சிறப்பைத் தர வேண்டுமென்றால் அதனை ஒழுக்கம்தான் தரும் என்பதுதான் வள்ளுவத்தின் நிலையாகும். அப்படியான ஒழுக்கத்தைக் காப்பாற்றுவது எப்படி என்பதையும் அறியவேண்டும் அல்லவா?

வீடிழுந்தால் மீண்டுமொன்றைவாங்கலாம் அல்லது கட்டிக்கொள்ளலாம். மனைவி இறந்தால் மறு தாரம் மணம்செய்து கொள்ளலாம். பொருளை இழந்தால் பின்பு உழைத்துக. கொள்ளலாம். ஆனால் போனால் வராத பொருள் இரண்டு. ஒன்று ஒழுக்கம். அதாவது மானம். மற்றொன்று உயிராகும். இரண்டுமே போனால் போனதுதான். சிலவேளை நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்பால் போன உயிரை ஒரு வேளை மீட்டாலும், போன மானத்தை எந்தக் கண்டுபிடிப்பாலுமே திரும்பக் கொண்டுவர முடியவே முடியாது. எனவேதான் அதனை உயிரினும் ஓம்பப்படும் என்று வள்ளுவம் வலியுறுத்திக் காட்டி இருக்கிறது. அதாவது உயிரைக் காப்பாற்ற எப்படியெல்லாம் வாழ்வில் போராடுகின்றோமோ, அப்படி ஒழுக்கத்தையும் காப்பாற்றி நிற்கவேண்டும் என்பதுதான் வள்ளுவத்தின் வாழ்வியல் முறையாகும்.

இன்றைய இளந் தலைமுறையினருக்குக் கட்டாயம் ஒழுக்கத்தைப் பற்றி வள்ளுவம் சொன்னவற்றை மனதில் படியப் பண்ணுதல் வேண்டும். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்றலைகின்ற மனப்பாங்கை மாற்ற வேண்டும். இளந் தலைமுறையினருக்கு அறிவுறுத்துவதற்கு வளர்ந்தவர்களும் ஒழுக்கத்துடன் வாழ்ந்துகாட்ட வேண்டியது மிக மிக அவசியமானதாகும். ஒழுக்கம் என்று பார்க்கின்ற பொழுது, போதைப் பொருள் பாவனை, சூதாடுதல், கொலை செய்தல், விபசாரம், யாவும் இவற்றுள் அடங்குகின்றன. போதைப் பொருள் பாவனையால் படிக்கும் மாணவ சமுகமே தறிகெட்டுப் போய்க் கொண்டிருக்கிறது.கல்விக் கூடங்களிளெல்லாம் போதைப் பொருள்கள் பயன்படுத்தல் மலிந்து காணப்படுகின்றதென நாளும் வருகின்ற செய்திகளை அறிந்து - வேதனைப்படுகின்றோம். இந்த நிலையில் வள்ளுவத்தின் கள்ளுண்ணாமை என்னும் வாழ்வியல் தத்துவம் மிகவும்இன்றியமையாததாகவே இருக்கும்.

அறிவைக் கெடுப்பது கள்ளாகும். அதாவது போதைப் பொருள்களாகும். அறிவு இழந்தால் அனைத்துமே இழந்த மாதிரித்தானே! எந்தப. பிழைகள் செய்தாலும் தாங்கும் தாய் கூட கள்ளுண்ணும் பிள்ளையைக் காறி உமிழ்ந்து வெறுத்து நிற்பாளாம். பெரியவர்கள் கூட இவர்களை வெறுத்து ஒதுக்கி விடுவார்களாம்.

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்று
சான்றோர் முகத்துக் களி.

அன்பு செலுத்தும் அம்மாவும் , அருள் செலுத்தும் பெரியோர்களும் கள்ளுக்குடியனை கண்டாலே வெறுத்தொதுக்கி விடுவார்கள் எனும் நிலை வாழ்வில் தேவை தானா?

இளந் தலைமுறையினரே எண்ணிப்பாருங்கள். கள்ளினால் அறிவு மழுங்க என்ன செய்கிறோம் என்று தெரியாத மயக்க நிலையில் கொலையும் செய்து , கொள்ளையிலும் ஈடுபட்டு, வாழ்வினனையே நரகமாக்கும் வழியில் செல்லுதல் தகுமா? வெறி ஏறினால் நெறியங்கே இறங்கிவிடும். நெறி பிறழ்ந்தால் நீசத்தனம்தான் தலை விரித்து ஆடும்.

இதனை இன்று கல்விக்கூடங்களிலும், வேலைத் தலங்களிலும், பார்க்கின்றோம். குடியால் வீதியில் கொலை! பல்கலைக்கழக விடுதிகளிலே கொலை! இவை தேவையா எனச் சிந்திக்கும் பொழுதுதான் வள்ளுவத்தின் அவசியம் யாவருக்கும் தேவைப்படுகின்றது. கள்ளுண்பது நஞ்சுண்பதற்குச் சமமாகும். நஞ்சை விரும்பாதீர், நல்லதை விரும்புங்கள் என்கிறது வள்ளுவம். குடி குடியைக் கெடுக்கிறது. காமமும் வாழ்வையே அழிக்கிறது. காமத்தை அளவோடு, பக்குவமாகக் கையாண்டால் அது இல்லற இன்பமாக மலரும். ஆனால் அதே காமத்தை துஷ்பிரயோகம் செய்தால் எல்லாமே அழிந்து விடும்.

இன்று உலகையே உலுக்கி எடுத்துக் கொண்டிருப்பது எது தெரியுமா? அதுதான் எயிட்ஸ் என்னும் பிசாசாகும். இது பிடித்துவிட்டால் விடவே விடாது. இதனால் இதன் பெயரைக் கேட்டாலே மரணபயமே முன்னிற்கிறது. இதற்குக் காரணம்தான் என்ன? வரம்பற்ற காமமேயாகும். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பதை மறந்த காரணமே இந்தப் பயங்கரமாகும்.

பெண்கள் வரம்பு மீறுவதோ, ஆண்கள் வரம்பு மீறுவதோ கூடாது. வரம்பை மீறியதன் விளைவுதான் எயிட்ஸின் வருகை எனலாம். உள்நாட்டிலும் சரி, வேலைக்காக, படிப்புக்காகப் புலம்பெயர்ந்து சென்ற நாடுகளிலும் சரி, வரம்ப. மீறினால் விபரீதம் வரும் என்பதை ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்னும் மந்திர மொழியால் வள்ளுவம் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் சொல்லிய வாழ்வியல் நெறி இப்போதும் ஏற்றத்தக்கதாக இருக்கிறதல்லவா?

காமம் எப்படியெல்லாம் மனித வாழ்வைப் படாதபாடு படுத்துகிறதோ அப்படிதான் கோபமும் அமைந்துவிடுகிறது. சினத்தின் உச்சத்தால் வெடித்ததுதான் உலகத்தின் போர்கள் எல்லாமே. தனிப்பட்ட சினம் தன்னையழிப்பதோடு தன்னைச் சேர்ந்தவர்களையும் கூட அழித்துவிடும் கொடூரமானதாகும். ஹிட்லரின் கோபம், முசோலினியின் கோபம். ஜார் மன்னர்களின் கோபம், பிரிட்டிாரின் கோபம் உலகின் அழிவுகளுக்கு வித்திட்டன. இன்றுவரை உலகின் பல பாகங்களிலும் அரசியல் தலைமைகளின் அடங்காத கோபத்தால் சண்டைகள் ஓயாமல் நடந்தபடியே இருக்கின்றன. அழிவுகளும் தொடர்கின்றன. அழிவுகள் அகல வேண்டுமானால் சினம் அடங்குதலே சிறந்த மார்க்கமாகும்.இந்த இடத்தில் வள்ளுவம் காட்டும் -

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

என்னும் வாழ்வியல் தத்துவம் மிகவும் மிகவும் பயனுடையதாகவே இருக்கிறது. இதனால் தான் சினத்தை நெருப்புடன் இணைக்கின்றது வள்ளுவம். சேர்ந்தாரைக் கொல்லி என்று மிகவும் நுட்பமான கருத்தை நெருப்புக்கு வைத்தமை வள்ளுவத்தின் திறனல்லவா? யார் சேர்ந்தாலும் நெருப்பு - வைத்துப் பார்க்கமாட்டாது. பொசுக்கியே விடும். அதே அளவு சக்தி சினத்துக்கும் இருக்கிறது என்று காட்டியிருப்பதில் இருந்து சினம் என்பது எவ்வளவு பயங்கரமானது என்பதை மக்களனைவரும், ஏன் உலகமே உணரவேண்டும் என விரும்பிய வள்ளுவத்தைப் போற்றாமல் இருக்க முடியுமா? இஸ்ரேலியர்களுக்கும், பாலஸ்தீனயர்களுக்கும், உலகின் தீவிரவாதக் கூட்டங்களுக்கும் வள்ளுவத்தின் இந்தப் போதனையை உணர்த்தினோமேயானால் சாந்தியும் சமாதானமும் அங்கு உதயமாகும்.

சினம் மக்கள் வாழ்வியலைச் சீரழித்துவிடும் என்பதால் அதனை புறந்தள்ளி விட்டு விட்டு யாவரும் அன்பை வளர்த்தல் அவசியமானதாகும். அன்பு என்பது யாவரையும் உயர்தும். அன்பு என்பது யாவரையும் மகிழ்ச்சிப்படுத்தும். அன்புடன் இருப்பதுதான் வாழ்வினுக்கு அர்த்தத்தையே ஏற்படுத்தும்.

அன்பு இல்லாதவர்கள் உலகத்தில் இருக்கின்ற அனைத்து இன்பங்களும் தமக்கு மட்டும்தான் என்றே எண்ணுகிறார்கள். அவர்களது நினைப்பு தவறானதாகும். ஆனால் அன்புகொண்ட நெஞ்சத்தாரோ - தங்களின் உடல், பொருள்,ஆவி அனைத்தினாலும் உதவியே நிற்கின்றார்கள்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

உயிர் வளர்ச்சி என்பது - உடலாலும் அறிவாலும் அன்பாலும் வளர்வதாகும். அறிவும் அன்பும் வளராத உடல்வளர்சி உண்மையான வளர்ச்சியாகாது. ஆகையால் அன்பு இல்லாதவர்கள் எல்லா நன்மைகளும் தமக்கே வந்து அமையவேண்டும் என்று எண்ணுவது - அவர்களிடம் அன்பு வளர்ச்சி, அறிவு வளர்ச்சி இல்லை என்பது மட்டுமல்ல - வெறும் உடல் வளர்ச்சி மட்டுமே பெற்றிருக்கின்றார்கள் என்பதையும், அந்த உடல் வளர்ச்சியுடனேயே அழிந்து, ஒழிந்து விடுவார்கள் என்ற உண்மையயும் வள்ளும் காட்டும் பாங்கு வாழ்வியலில் முக்கிய எச்சரிக்கை அல்லவா?

வள்ளுவம் காட்டிய அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்பதை வாழ்வியலாக்கி வாழ்ந்து காட்டியவர்தான் அல்பேணியா ஈன்றெடுத்த அன்னை திரேசா என்னும் அன்பின் திருவுரு. எங்கிருந்தோ வந்து இன்னார், இனியார் என்று எண்ணாது அன்னையவர்கள் ஆற்றிய பணி வள்ளுவத்தின் வழியல்லவா? வள்ளுவம் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் நாம்தான் அதனைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறோம்.!

உள்ளத்து உயர்வுக்கு வாய்மையும் முக்கிய காரணம் ஆகிறது. வாய்மைவழி உலகம் நிற்கவேண்டும், உலக மக்கள் உள்ளத்தால் பொய்யாது இருக்கவேண்டும் என்பதே வள்ளுவத்தின் இலட்சியமே ஆகும். ஒவ்வொருவரும் உள்ளத்தால் பொய்யாது ஒழிகினால் உலகத்துக்கே உவந்தவனாக, எல்லோரும் கொண்டாடும் ஒருவனாக வருவான் என்று நம்பிக்கையை சொல்லி நிற்பதுதான் வள்ளுவத்தின் வாழ்வியலாகும்.

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

இதன்படி வாழ முடியுமா என்று கேட்காதீர்கள். வாழ்ந்து காட்டியிருக்கிறார் ஒருவர். அவர்தான் அண்ணல் தேசபிதா மகாத்மா காந்தி அவர்கள். காந்தி அவர்களின் பிரிவுச்செய்தி பரவியவுடன் புத்தருக்குப் பின் இந்தியாவில் தோன்றிய மாமனிதர் மறைந்துவிட்டார் என்று உலகத் தலைவர்கள் தமது மனக் கிடைக்கையை வெளிப்படுத்தினார்கள். அதுமட்டுமல்ல நடந்துகொண்டு இருந்த ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டமே ஒத்திவைக்கப்பட்டது. உலக நாடுகள் அனைத்திலும் அந்நாட்டுக் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டன. இங்குதான் வள்ளுவத்தின் வாழ்வுநெறியை மகாத்மா காந்தி அவர்கள் உலகுக்கே உணர்த்திய உத்தமராகி நிற்கின்றார்.

## வள்ளுவத்தின் உன்னதம்

வள்ளுவரைப் போல் மிகப்பெரிய ஞானக்களஞ்சியத்தை வழங்கியவர்கள் இந்தவுலகில் எவரும் இல்லை என்னும் சிந்தனை மகாத்மா காந்தியின் சிந்தனையாகும். அதனைத் தனது வாழ்வியல் ஆக்கியபடியால்த்தான் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் அமரும் நிலையினைப் பெற்றார்.

"இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும் என்னும் நூலில் திருக்குறள் இல்லாமல் இந்தியச் சிந்தனை என்பது முடிவில்லாததாகும் என்று ஆல்பிரட் ஸ்வைட்சர் என்னும் அறிஞர் போற்றி நிற்கின்றார்.

ஒழுக்கமே மனிதனுடைய உயர்ந்த குறிக்கோளாக இருக்கவேண்டும் என்பதை மிகுந்த உறுதியோடு வள்ளுவர் கூறியிருக்கிறார். ஒவ்வொருவரும் தனக்குள் தானே செய்ய வேண்டிய கடமை என்ன? மற்றவர்களுக்குச் செய்யவேண்டிய கடமை என்ன? என்பனவற்றையெல்லாம் சிறந்த பண்பாட்டோடும், மதிநுட்பத்தோடும் வள்ளுவர் பேசுகிறார். உலக இலக்கியங்களுள் இத்தகைய மாண்புமிக்க மெய்யறிவு வேறு எந்த நூலிலும் இத்தனை சிறப்பாகப் பொலிவுறவில்லை என்று சொல்லலாம் என உலக அறிஞரான ஆல்பர்ட் ஸ்வைட்சர் போற்றி உள்ளார் . அதுமட்டுமல்ல, பிற இந்திய மொழி நூல்கள் வாழ்வின் நிலையாமையை வலியுறுத்துகின்றன. ஆனால் திருக்குறளோ வாழ்க்கை வாழ்வதற்கே என்ற உடன்பாட்டினை உணர்தும் நூல் என்றும் விதந்து கூறுகின்றார். இதிலிருந்து வள்ளுவம் என்பது மிகச்சிறந்த வாழ்வியல் நூல் என்பது புலனாகிறதல்லவா?

பல உலக மொழிகளில் வள்ளுவம் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. எதற்காக இப்படிச் செய்யப்பட்டது என்பதை உற்றுநோக்கினால் வள்ளுவம் காட்டும் வாழ்வியலை யாவருமே விரும்புவதுதான் முக்கிய காரணமெனலாம்.

வள்ளுவத்தில் சொல்லப்பட்டவற்றைத் தவறாது வாழ்வில் கடைப்பிடிக்கத் தவறுதல் கூடாது. வாழ்க்கையுடன் பொருத்திப் பார்த்து எவற்றைச் செய்தல் வேண்டுமோ அவற்றைச் செய்து, எவற்றைத் தவிர்க்க வேண்டுமோஅவற்றைத் தவிர்க்க வேண்டும். எப்படியும் வாழலாம் என்று வாழும் உலக மக்களுக்கு இப்படி வாழ்ந்து பாருங்கள், உங்கள் வாழ்வு இன்பமாக, இன்னலின்றி , அமைதியாக, அறம் செறிந்து, அகமும், புறமும் தூய்மையாக, இதுதான் வாழ்க்கை என்று இருக்கும் என்னும் வழியைக் காட்டி நிற்பதுதான் வள்ளுவத்தின் வாழ்வியலாகும்.ஆகவே வைகத்திலுள்ளோர் வாழ்வாங்கு வாழ வேண்டுமாயின் வள்ளுவம் சொல்லும் வாழ்வியலைப் போற்றுங்கள்.அதன்படி வாழ்ந்து வளம்பெற்றிடுங்கள்!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

# மீண்டும் பிழை விட்டோம்!



## அக்கரை அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு எதிராகக் கூட்டமைப்பு பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் முன்னெடுத்துள்ளகையெழுத்துவேட்டை, தமிழர் சார்ந்த ஒரு நிகழ்வாகவே முடிந்து விட வாய்ப்பு உள்ளது. அது ஒரு தனி நபர் முயற்சியாகவும், அதனால் அது சமூகத்தின் ஒருமித்த கருத்தாகவும் கூட காணப்படாமல் போகலாம். காரணம், தமிழ் அரசியல் தலைமையினுள் தொடரும் பெரியவன் - சிறியவன் என்ற ஈகோ பிரச்சினை தீர்ந்தபாடில்லை.

இவ்வாறான, ஈகோ பிரச்சினையை மட்டுமே முன்னிறுத்தி தமிழர் அரசியலில் தங்களை அடையாளம் காட்டிக் கொள்பவர்கள் அதிகம். அவர்களுக்கு என்று ஆதரவாளர்களோ, வாக்கு வங்கியோ இல்லாதது நிதர்சனம். அது போன்றே, இந்த ஈகோ பிரச்சினையினால் தமிழர் அரசியலில் காணாமல் போனவர்கள் இன்னும் பலர். அவர்களில் சிலராவது, இன்னும் தங்களுக்கு அரசியல் வாய்ப்புகள் உள்ளன என நம்பி, தங்களை தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள்.

இந்த கையெழுத்து வேட்டை கால கட்டத்திலேயே, சுமந்திரன் வேறொரு முன்னெடுப்பை செய்திருந்தார். அது அகில இலங்கை சார்ந்தது. நாட்டின் பொருளாதார நிலையை குறித்து விவாதிக்க அவர் தலைநகர் கொழும்பில் அனைத்துக் கட்சி கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். எதிர்க்கட்சி தலைவர்கள் தவிர, ஆளும் தரப்பில் நாடாளுமன்றத்தில் பொருளாதாரம் குறித்த மூன்று நிலை குழுக்களின் தலைவர்களும் இந்த இரு கட்ட விவாதங்களில் பங்கு பெற்றார்கள். பொது விவாத மேடையாக இல்லாமல், கட்சி தலைவர்கள் மட்டுமே பங்குபெற்ற அந்த கூட்டம், முடிவில் அரசிற்கு சில - பல ஆலோசனைகளை வழங்கியது. கமுக்கமாக நடந்தேறிய இந்த முயற்சி குறித்து, தமிழ் ஊடகங்கள் செய்தி வெளியிடவில்லை. அல்லது, அதனை ஒரு புறம் ஒதுக்கி, சிறிய செய்தியாகவே வெளியிட்டன.

தமிழ் ஊடகங்கள், இனப் பிரச்சினையும், வடக்கு - கிழக்கில் சாலை விபத்துகளும் மட்டுமே செய்தி என்ற வகையில் செயல்பட்டு வருகிறார்கள். இதற்கு காரணம், தமிழர் அரசியல் தலைமைகள், நாட்டின் பிற பிரச்சினைகள் குறித்து, அறிந்து வைத்திராமைதான். அதன் காரணமாகவே, அவர்களால், பொருளாதாரம் போன்ற முக்கிய பிரச்சினைகள் குறித்து, அறிவுபூர்வமாக நாடாளுமன்றத்தின் உள்ளும் புறமும் அதிகம் விவாதிக்க முடிவதில்லை. அவர்களும் முயல்வதில்லை.

அவ்வாறு செய்தால் மட்டுமே, தென்னிலங்கை அரசியல் தலைமைகளும், அவர்கள் சேர்ந்த பெரும்பான்மை சிங்கள இன வாக்காளர்களும், தமிழர் அரசியல் தலைமைகளுக்கு இனப்பிரச்சினைக்கு அப்பால், நாட்டை எதிர்நோக்கியிருக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து தீர்க்கமான அறிவு இல்லை என்று கருதி வருகிறார்கள். இது போன்ற காரணங்களால், வடக்கு . கிழக்கு தமிழ் சமூகத்தினரிடையேயும், நாட்டின் பொருளாதார பிரச்சினைகள் குறித்துப் போதிய அறிவும் இல்லை. அது குறித்த கவலையும் இல்லை. அவர்களை பொறுத்தவரையில், பொருளாதாரம் என்பது, விலைவாசி மற்றும் பொருள்களின் தட்டுப்பாடு என்பன குறித்த விடயம் மட்டுமே.

### தென்னிலங்கை ஆதரவு

இங்கு பொருளாதாரம் குறித்துப் பேசுவதே, சுமந்திரன் சார்ந்த விடயம் மட்டுமே. அதிலும் குறிப்பாக, பயங்கரவாத தடுப்புச் சட்டத்திற்கு எதிரான கையெழுத்து வேட்டை குறித்த விடயம். எவ்வாறு, பொருளாதார பிரச்சினை குறித்து, அவர் நாட்டில் ஒன்றிய கருத்தை ஏற்படுத்தினாரோ, அதே முறைமையில், பயங்கரவாத தடைசட்டத்திற்கு எதிராகவும் அவர் ஒரு முன்னெடுப்பை செய்திருக்க வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே அதற்கு தென்னிலங்கை மக்களின் ஆதரவை திரட்ட முடியும். அதற்கு இன்னமும் காலம் தாழ்ந்து விடவில்லை.

தென்னிலங்கை மக்கள் இந்த சட்டத்தின் ஆபத்தான பிரிவுகள் குறித்து விவரமாக அறிந்திருந்தால் மட்டுமே, அவர்களது அழுத்தம் காரணமாக அரச தலைமை இது குறித்து சரியான முடிவுகளை எடுக்க முடியும். இல்லையென்றால், இது, விடுதலைப் புலிகள் தடை குறித்த சட்டம் மட்டுமே என்ற எண்ணவோட்டமே தென்னிலங்கையில் தொடரும். இதன் காரணமாக மட்டுமே, இந்தச் சட்டம் குறித்து அரசியல் தலைமை என்பதற்கு அப்பாலும், அரச தலைமை ஒரு குறித்த நிலையை எடுத்து வருகிறது. இதற்கு கூட்டமைப்பின் ஆதரவால் மட்டுமே ஆட்சியில் தொடர்ந்த சிறிசேனா - ரணில் அரச தலைமையும் விதிவிலக்கல்ல.

அன்றும், இன்றும், என்றும், தென்னிலங்கை மக்களின் ஆதரவு இருந்தால் மட்டுமே, இனப்பிரச்சினை குறித்த பல்வேறு விடயங்களில் தமிழர் தரப்பு, அரசைத் தங்கள் பக்கம் வளைத்து, இழுக்க முடியும். இதற்கு, கடந்த 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா அம்மையாரின் வெற்றியும், அதனை தொடர்ந்து, அவர் அளித்த தீர்வு தொகுப்பும் சிறந்த உதாரணம். அந்த தேர்தலில், தமிழர் தரப்பும் அவருக்கு ஆதரவு அளித்ததால் மட்டுமே, அவரால் சிங்கள மக்களும் ஏற்றுக் கொள்ள கூடிய தீர்வை முன்வைக்க முடிந்தது.

சந்திரிகா அம்மையாரின் அந்த தீர்வு திட்டத்தின் மீது பேச்சுவார்த்தை நடத்தி நல்ல முடிவை எடுக்க விடுதலைப் புலிகள் இயக்கம் அன்று தவறி விட்டது. அதனால், 'மீண்டும் பிழை விட்டோம்' என்ற பழைய பல்லவியை தமிழர் தரப்பு இன்றும் பாடிக் கொண்டிருக்கும் நிலைமை தோன்றியது. காரணம், தமிழ் வாக்காளர்களை மிரட்டி, உருட்டி அவர்கள் தங்களது முடிவை ஏற்றுக்கொள்ள வைக்கும் வலிமையையும், முறைமையையும் விடுதலைப் புலிகள் அன்று கற்றிருக்கவில்லை.

பத்தாண்டுகளுக்கு பின்னர், 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில், ரணில் தோல்வி அடைந்தமைக்கும், மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றமைக்கும் விடுதலைப் புலிகளின் தேர்தல் புறக்கணிப்பு உத்தரவே காரணம் என்பது நாடறிந்த உண்மை. அதற்காக, ராஜபக்ஷக்களி டமிருந்து, விடு தலை புலிகள் பணம் பெற்றிருந்தனர் என்ற குற்றச்சாட்டு, அப்போதே தோன்றி அடங்கியது. அவர்களது காலத்திற்கு பின்னர், மீண்டும், அவ்வப்போது முளைத் தெழுந்து வருகிறது.

ஆனால், ராஜபக்ஷக்களை எதிர்த்துத் தொடர்ந்து அரசியல் செய்து வரும் தமிழர் தரப்புகளும் அவர்களுடைய ஆதரவாளர்களும் இது குறித்து எதுவுமே பேசுவதில்லை. விடுதலைப் புலிகளின் இந்த நடவடிக்கை குறித்துப் பேச்சு எழும் போதெல்லாம், உள்நாட்டிலும் சரி, புலம் பெயர்ந்தோரிடமும் சரி, விடுதலைப் புலிகள் ஆதரவாளர்கள், சில காலம் காணாமல் போய்விடுவார்கள்.

அதாவது, இலங்கை அரசு மற்றும் அரச தலைமை குறித்து, தமிழர் தரப்பு எழுப்பும் பிரச்சினைகள் ஒவ்வொரு முறையும் உச்சகட்டத்தை அடையும் போது, யாராவது இது போன்று கொளுத்தி போட்டால் போதும், முக்கிய பிரச்சினையும் கூட அதனுடன் அமுங்கி போய்விடும். பிறகு, வீட்டில் முடங்கி, 'பிழை விட்டோம்' பல்லவிதான்.

### திசை திருப்புதல்

பயங்கரவாதத் தடை சட்டத்திற்கு எதிரான சுமந்திரனின் கையெழுத்து வேட்டையில், கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையும் தனது பங்களிப்பை செலுத்தி உள்ளார். ஆனால், அவர் கையெழுத்திட்டால் மட்டும் தென்னிலங்கை கத்தோலிக்க கிறிஸ்தவர்கள், இத்தகைய முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்து விடுவார்கள் என்று அர்த்தம் அல்ல. அதனை சுமந்திரனும் எதிர்பார்க்க மாட்டார் என்றே எண்ணத் தோன்றுகிறது.

காரணம், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக, உயிர்த்த ஞாயிறு தினத் தீவிரவாத தாக்குதல் குறித்த ரஞ்சித் ஆண்டகையின் தனி நபர் போராட்டத்திற்கு ஆதரவாக, தென்னிலங்கையை சார்ந்த கிறித்தவ அரசியல்வாதிகள் யாருமே ஆதரவு தெரிவித்தாரில்லை. இப்போதும் அந்த நிலைமையே தொடர்கிறது. இனியும் தொடரும். அதனால் தானோ என்னவோ, அரசும், அரச தலைமையும் அவரது கோரிக்கைகளையும் குற்றச்சாட்டுகளையும் கண்டுகொள்ளாமலே விட்டுவிட்டன. அந்த வகையில், தாக்குதல் குறித்த விசாரணையில் நம்பிக்கையின்மையை தெரித்த அவரது நிலைப்பாடு, ஒரு தனி நபர் போராட்டமாகவே தொடர்கிறது.

இதற்கான மாற்று, அல்லது பிரதிபலிப்பு ஜெனிவாவில் இந்த மாத இறுதியில் துவங்க இருக்கும் ஐ.நா. மனித உரிமை பேரவை கூட்டத்தில் தெரியும் என்று எதிர்பார்க்கலாம். கூட்டத்தில் ஐ.நா. மனித உரிமைக்கான உயர் ஸ்தானிகர் மைக்கல் பார்சலெட் அம்மையாரின் துவக்க உரையில், இலங்கைக்கான பகுதியில், கர்தினாலின் சந்தேகங்கள் மற்றும் குற்றச்சாட்டுகள் குறித்து கவலை தெரிவிக்கப்படலாம். அதுவே, தொடரும் விவாதங்களிலும் கூட பிரதிபலிக்கும். அது போன்றே, பின்னர் வரக்கூடிய (பெரும்பாலும் அடுத்த செப்ரெம்பரில் வரக் கூடிய) வாக்களிப்பு கோரும் புதிய பிரேரணையிலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை குறித்து ஒரு பத்தியாவது இடம் பெறும் என்றும் எதிர்பார்க்கலாம்.

ஆனால், இனப்பிரச்சினை குறித்த விடயத்தில், இது போன்ற அரசிற்கான அழுத்தங்கள் எல்லாம், பிரச்சினையைத் திசை திருப்ப மட்டுமே பயன்படும். அரசு அதனை கருத்தில் கொண்டு செயல்படுகிறது என்று கூற முடியாது. ஆனால், எப்போது மனித உரிமை பேரவையில் கடந்த மார்ச் மாதத்தின் 46/1 தீர்மானத்தில், போர்குற்றங்கள் மற்றும் அது குறித்த பொறுப்புக்கூறல் விடயங்களோடு, சர்வதேசம், நாட்டில் அரங்கேறி வரும் பிற மனித உரிமை மீறல் நிகழ்வுகளையும் சேர்த்து பேசத் துவங்கி உள்ளது. அதனால், தமிழர்களின் பிரச்சினைகள் நீர்த்துப்போக துவங்கி விட்டனவோ என்ற ஐயப்பாடு தோன்றுகிறது.

### தவறான கண்ணோட்டம்

இதற்காக, சர்வதேசத்தின் நோக்கத்தை சந்தேகப்பட வேண்டும் என்பதல்ல பொருள். மாறாக, மனித உரிமை பிரச்சினையைக் காரணம் காட்டி, இலங்கை அரசையும் தற்போது பதவியில் இருக்கும் ராஜபக்ஷக்களையும் தொடர்ந்து குற்றம் சாட்டுவது மட்டுமே, தமிழர் தரப்பின் அபிலாஷைகளையும், தேவைகளையும் பூர்த்தி செய்துவிடும் என்று கருதி விடக் கூடாது. மாறாக, தமிழர்களின் கோரிக்கைகள் வேறு, நாட்டில் இடம் பெறும் பிற மனித உரிமை மீறல்கள் வேறு என்ற உண்மை குறித்த தெளிவு தமிழர் தரப்பிற்கு இருக்க வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்று கூறலாம். மனித உரிமை கவுன்ஸில் பொறிமுறைகள் மூலம், சர்வதேசம் ராஜபக்ஷக்களையும், இலங்கை அரசையும் தண்டிக்கிறது என்றே வைத்துக் கொள்வோம், அதற்கு இன்னமும் பல ஆண்டுகள் ஆகி விடும். அதை விட முக்கியமாக, அவர்களுக்கு தண்டனை பெற்று கொடுத்தால் மட்டும், தமிழர்களது கோரிக்கை நிறைவேற்றப் பட்டு விடுமா?

தமிழர் அரசியல், சமூகம் மற்றும் புலம்பெயர்ந்தோர் தரப்புகளில், போர் குற்றங்கள் மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது ராஜபக்ஷக்களுக்கு சர்வதேச அழுத்தம் கொடுத்தாலோ, அல்லது அதனைத் தாண்டி தண்டனை கொடுக்கப்பட்டாலோ மட்டுமே நிறைவேறி விடும் என்பது போன்ற ஒரு தவறான கண்ணோட்டம் நிலவி வருகிறது.

(10ஆம் பக்கம் பார்க்க)

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்
செவ்வழி நயனம்

# கோளறு பதிகம்



**பாடல் - 02**

**என்பொடு கொம்பொடாமை இவைமார்பு இலங்க**
**எருதேறி ஏழை உடனே**
**பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**ஒன்பது ஒன்றொடுஏழு பதினெட்டொடு ஆறும்**
**உடனாய நாள்கள் அவைதாம்**
**அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல**
**அடியார் அவர்க்கு மிகவே.**

பொழிப்பு:-

எலும்பும் (சட்டைநாதராக) மஹாவிஷ்ணு பன்றி அவதாரம் எடுத்தபோது, அவதாரத்தை முடித்து வைத்து, அடையாளமாகக் கொம்பையும், அவரே ஆமை அவதாரம் எடுத்து அவதார நோக்கம் நிறைவேறிய பின் அதையும் முடித்து வைத்து, அதன் வலிமையான ஓட்டையும் தன் திருமார்பில் அணிந்து தன்னை அறிவிப்பவரும், பொன்போன்ற மகரந்தம் நிறைந்த ஊமத்தை மாலையைத் தலையிற் சூடியவரும், கூடவே கங்கையை அமர்த்திக்கொனெடு என் உள்ளக் கமலத்தில் வீற்றிருப்பவருமான உமாமகேஸ்வரன் இருக்கையில் அஸ்வினி முதலாகக் கொண்டு, ஒன்பதாவது நாளான ஆயில்யமும் ஒன்பதோடு ஒன்று பத்தாவது நாளான மகமும், ஒன்பதோடு ஏழு ஆன பதினாறாம் நாளான விசாகமும், பதினெட்டாம் நாளான கேட்டையும், ஆறாம் நாளான திருவாதிரையும் உடனான நாட்களான பரணி, கார்த்திகை, புரம், சித்திரை, சுவாதி, புராடம், புரட்டாதி ஆகிய நாள்கள் அனைத்துமே அன்போடு, கனிவோடு நல்லன, நல்லன, மிக மிக நல்லனவே செய்யும்!

(சோதிட நூல் ஒன்றில் ஆதிரை, பரணி ஆரல், ஆயில்யமும் புரம், கேட்டை, தீதுறு விசாகம், சோதி சித்திரை, மகம் ஈராறும், மாதனம் கொண்டார் தாரார். வழிநடைப்பட்டார் மீளார். பாய்தனில் படுத்தார் தேறார். பாம்பின் வாய்த்தேரை தானே எனக்கூறியிருக்கிறது.)

(இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீட்டிலிருந்து)

**ஓவியமும் விளக்கமும் :- பத்மவாசன்**

வாரம் ஓர் ஆசனம்

# அர்த்தமச்சேந்திராசனம்



**செய்முறை**

படி 1. நேராக நிமிர்ந்து உட்கார்ந்து கால்களை நீட்டவும். பாதங்கள் இணைந்திருக்கட்டும். உள்ளங்கைகள் புட்டத்தின் இரு பக்கமும் ஊன்றியிருக்கட்டும்.

படி 2. வலது காலை மடக்கி குதிக்காலை தொடையின் கீழ்ப்பாகத்தில் மூலத்துடன் சேர்த்தவாறு வைக்கவும்.

படி 3. இடது பாதத்தை வலது தொடையின் வலது பக்க முழங்காலுக்கருகில் வைக்கவும்.

படி 4. வலது கையை வலது மார்புக்கும் இடது முழங்காலுக்கும் ஊடாகச் செலுத்தி இடது முழங்காலின் வெளிப்புறப் பகுதி மீது பதிந்திருக்கட்டும்.

படி 5. இடக்கையானது முதுகைச் சுற்றி வலத் தொடைப் பகுதியைத் தொட முயற்சிக்கட்டும்.

படி 6. உடம்பை நிமிர்த்தி பார்வை இடது தோளின் மேல் இருக்கட்டும். உச்ச நிலையில் ஆழமாக சுவாசிக்கவும்.

படி 7. இடக்கையை விடுவித்து 4 ஆம் நிலைக்கு வரவும்.

படி 8. மெதுவாக முழங்காலை வெளிப்புறம் சுற்றியுள்ள வலது கையை விடுவித்து மூன்றாம் நிலைக்கு வரவும். பின் 2 ஆம் நிலைக்கு வந்து பின் ஆரம்ப நிலைக்கு வரவும்.

**பலன்கள்**

முதுகெலும்பை நன்றாக முறுக்கேற்றி உரமேறச் செய்கின்றது. கழுத்து பகுதி நரம்புகள் தசைகள் கீழ் முதுகு, முள்ளந்தண்டு வளையும் தன்மை பெற்று ஆரோக்கியமடைகின்றன. கல்லீரல், மண்ணீரல், சதையி, சிறுநீரகங்கள், சிறுநீர்ப்பைக் குடல்கள் என்பன அழுத்தப்பட்டு அவற்றின் செயற்பாடு அதிகரிக்கின்றன. ஆண்மை, பெண்மை அதிகரிக்கும். பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகள் முதலிய உடலியல் ரீதியான பிரச்சினைகள் கட்டுப்படுத்தப்படும். அதிரீனல் சுரப்பி நன்கு வேலை செய்கின்றது. கர்ப்பம் சம்பந்தமான பிரச்சினைகள் இல்லாமல் போகும். மலச்சிக்கல், சிறுநீரகக் கோளாறு, மூட்டு வலி, சமிபாட்டுப் பிரச்னைகள் மற்றும் வாயுக் கோளாறுகள் நீங்கும். சோம்பலை நீக்கி சுறுசுறுப்பை ஏற்படுத்தும். நீரிழிவு குணமாகும். அதிக இரத்தம் உருவாகும்.

**- ஸ்ரீ. நதிபரன் -**
(யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)



# அறிவு வழிபாட்டில் அறிவு




மனத்தை அது போகும் போக்கிற்கெல்லாம் போக விடாது அதனைத் தடுத்து தீமையானவற்றிலிருந்து நீக்கிக் காத்து நன்மையானவற்றில் அதனைச் செல்லவிடுவதே அறிவு என்பார் பேராசான் திருவள்ளுவர். இவ்வாறு மனத்தைத் தீமையானவற்றிலிருந்து நன்மையானவற்றிற்குத் திசை திருப்புவதற்கு இன்றியமையாதது சமய அறிவு. இதனாலேயே சமயநெறியில் வழிபடுதல் அல்லது வழிபாடு என்பது முதன்மை பெறுகின்றது. ஞானத்திரளாய் நின்றபெருமான் நல்லடியார் மேல், ஊனத்திரளை நீக்குமதுவும் உண்மைப்பொருள் போலும் என்று திருஞானசம்பந்தர் இதனைக் குறிப்பிடுவார். சிவபெருமான் அறிவின் திரண்ட வடிவாக இருக்கின்றான். அப்பேரறிவே நாளும் நன்மையானவற்றயே வேண்டி, வழிபட்டு நிற்கின்ற அடியவர்களின் மேல் உள்ள குற்றக் குவியல்களைப் போக்கி நல்வழிப் படுத்துகின்ற உண்மைப் பொருள் என்று குறிப்பிடுவார். எனவே இறைவழிபாடு என்பது இறைவனை அறிவின் திரண்ட வடிவாகக் கண்டு அவ்வறிவு நிலையை எய்துவதற்கு நாம் அவன் திருவருளை வேண்டுவது என்பதனைத் தெளிதல் வேண்டும். பேர் அறிவுப் பேர் அருளாளனாக விளங்கும் அப்பெருமானிடத்தில் உள்ள அறிவினைப் பெறுவதற்கு அப்பெருமானின் பேர் இயல்புகளை அறிதலும் நம் அகப்புறக் குற்றங்களைக் களைதலும் இன்றியமையாதவை ஆகும்.

(13 பக்கம் பார்க்க)

நன்றி: மலேசிய சைவ நற்பணிக் கழகம்

# நல்லைக் கந்தன் கழற்கோர் கவிமாலை

தானதன தான தன்ன தானதன தான தன்ன
தானதன தான தன்ன - தனதான

அகம தாளு சீர்பாத மதுமு னாக வேகாலை
அதிக மான பேராளர் - பணிவோடே
அழக தாக வேகூடி பருகு வேணு கானாதி
அதிவி நோத மோடேபல் - சுவையோடு
சகல தோலி னாலான லயம தோடு தேனான
முகசங் கோடு ஆறாக - இசைபாய
சரச வீணை யேபேசு சுரவி நோத மோஈய
அசைவி லாம லேயாகு - நிலைகாணு
தகவ தாக வேசேரு இசைய தான தேவார
சகசந் தான கோபாலர் - தொழநின்றே
தரமுள் தோடி யேபாய பசுகள் பாலதே சீற
குழல தூது கோபால - மருகோனே
இகம தீன னாவாழு மிருள தான தேயோட
அருளை வாரி யேநீயு - தரவேணும்
இதய வாரி யேசுடி நிதம தாடு வோராளு
இகநல் லூரி லேவாழு - பெருமானே!

– கவிஞர் இராசையா குகதாசன் –

# டெங்கு நோய் தீவிரத்தில் பாரிய தாக்கம் செலுத்தும் எயிடிஸ் நுளம்பின் இயல்பும் எதிர்கொள்ளும் விழிப்பும்

டெங்கு நோயானது நகரமயமாக்கலுடன் நெருங்கிய நோயாகும். இந்த நோய்த் தாக்கம் ஒவ்வொரு வருடமும் அதிகரித்த வண்ணம் உள்ளது. டெங்கு நோய் அதிகரிப்பிற்குரிய காரணங்களாக டெங்கு பரவும் ஏது நிலையில் மக்கள் குறித்த பகுதிகளில் செறிவாக வசித்தலும் அதிக அளவான மக்கள் தொகைப் பெருக்கமும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. அடுத்து தனிப்பட்ட பிரயாணங்களின் அதிகரிப்பு டெங்கு பரவலை அதிகரிக்கின்றது. மேலும் நகர மயமாக்கலும் பொருளாதார மனிதவள நெருக்கடியும் டெங்கு நோய் அதிகரிப்பிற்கு காரணிகளாக அமைகின்றன என்கிறார் வைத்தியர் சி.எஸ். யமுனாநந்தா.



சி. எஸ். யமுனாநந்தா

இலங்கையில் டெங்கு நோயைப் பரப்புவதில் எயிடிஸ் அயிப்டிஇ எயிடிஸ் அலோபிட்டஸ் என்ற இரு வகை நுளம்புகள் செல்வாக்கு செலுத்துகின்றன. இவ்விரு வகை நுளம்புகளும் மனிதன் வாழும் இடங்களுக்கு அருகில் தமது வாழ்விடங்களை அமைத்துக்கொள்ளுகின்றன. இயற்கையாக நீர் தேங்கும் இடங்களிலும் தூய தெளிவான நீர் இருப்பதை எயிடிஸ் நுளம்புகள் எளிதில் கண்டறிகின்றன.

எயிடிஸ் நுளம்புகள் பொதுவாகத் தூய நீரில் பெருகும். எனவே நுளம்புக் குடம்பிகள் உருவா கும் நீர் தேங்கும் இடங்களை இல்லாது செய்வதால் எயிடிஸ் நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம். எயிடிஸ் அலோபிட்டஸ் நுளம்புகள் சேதனக் கழிவுகள் உள்ள நீரில் பெருகும் தகையது. மரப்பொந்துகள், மூங்கில் கீற்றுகள், பூச்செடிகளின் இலைகளுக்கு அடையில் உள்ள இடுக்குகள், மெல்லிய கலங்கிய நீர் உள்ள பாத்திரங்கள் இ நீர் சேகரிக்கும் தொட்டிகள், தற்காலிக கட்டடங்கள், அகற்றப்படாத கட்டமைப்புக் கள்.

அண்மையில் வொஷிங்டன்; பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வில் எயிடிஸ் பெண் நுளம்பு மனிதனைக் கடிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் கண்டறியப்பட்டன. இந்த நுளம்புகள் கூட்டுக் கண்கள் உடையன. இவை சிவப்பு, ஒரேன்ஞ், கறுப்பு, நீலம், பச்சை நிறங்களில் நாட்டம் அதிகம். ஊதா நிறத்தில் நாட்டம் குறைவு. மனிதனின் தோல் ஒளி படும்போது சிவப்பு நிறத்தையே தெறிப்படையச் செய்கின்றது. இந்தச் சிவப்பு நிறத்தை நுளம்புகள் எளிதாகக் கண்டறிகின்றன

அடுத்து மனிதன் சுவாசிக்கும் போது வெளிவரும் காபனீரொட்சைட் மணத்தையும் நுளம்புகள் கண்டறிகின்றன. மூன்றாவதாக மனிதனின் உடல் வெப்பத்தையும் வெப்ப உணர்வாங்கிகள் மூலம் அறிந்து கொள்கின்றன

எயிடிஸ் நுளம்புகள் மனிதன் சுவாசத்தில் வெளிவிடும் காபனீரொட்சைட்டின் மணத்தை உணர்ந்த பின் சிவப்பு, ஒரேஞ், கறுப்பு நிறங்களை நோக்கி நாட்டம் அதிகரிக்கின்றது. இந்த ஆராய்ச்சிகள் ஒருவரை எயிடிஸ் நுளம்புக் கடியிலிருந்து விலத்துவதற்கான வகைகளை எடுத்துக் கூறுகின்றது.

குறிப்பாக வெள்ளை நிற ஆடைகள் அணியும் போது நுளம்புகள் வராது. மேலும் உடலை மூடி ஆடைகளை அணியும்போது நுளம்பு கடிப்பதில் இருந்து பாதுகாக்கலாம். நுளம்புக்கு மனிதன் மீது உள்ள நாட்டத்தை அகற்றுவதாலும் நுளம்புக் கடியைக் குறைக்கலாம். எனவே, டெங்கு நோயைக் கட்டுப்படுத்த நுளம்பின் வாழ்விடங்களை அழித்தல், நுளம்பு மனிதனைக் கடித்தலைத் தவிர்த்தல் என்பனவும் நோயாளிகளுக்கான பூரண சிகிச்சையுடன் இணைந்ததாக அமையும்.

# இரவு வேளைகளில் வாள்களுடன் நடமாடும் கொள்ளைக்குழுவினர்!

## நடவடிக்கை எடுக்கத் தவறும் பொலிஸார்



யாழ்ப்பாணத்தில் இரவு வேளைகளில் வாள்களுடன் நடமாடும் குழு ஒன்று வீதிகளில் பயணிப்போரை அச்சுறுத்தி கொள்ளையில் ஈடுபடும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் நிலையில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளனர் எனப் பாதிக்கப்பட்டவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு தகவல் வழங்கும் போதும் சம்பவ இடங்களுக்கு வருகை தர பொலிஸார் மறுக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் இருந்து கொழும்பு நோக்கிக் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 7.30 மணியளவில் பயணித்துக் கொண்டிருந்த பஸ் மீது கோப்பாய் சமிக்ஞை விளக்கு பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டது.

கோப்பாய் சமிக்ஞை விளக்கு பகுதியில் பஸ் தரித்து நின்றபோது அவ்விடத்துக்கு வந்த இருவர் முதலில் தாக்குதலை மேற்கொண்டனர்.

எனினும் பஸ்ஸின் சாரதி திருப்பித்தாக்கத் தொடங்கிய போது அந்த குழுவில்வந்தவர்கள் இறங்கிபஸ்ஸை முந்திச்செல்ல முடியாதவாறு மெதுவாக மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றதுடன், தொலைபேசி அழைப்பை மேற்கொண்டதன் பின்னர் அந்த பகுதிக்கு மேலும் 6 பேர் அடங்கிய குழுவினர் மோட்டார் சைக்கிள்களில் வந்தனர்.

அங்கு வந்த குழுவினர் அந்த பஸ்ஸைத் தாக்கத் தொடங்கிய போது கோப்பாய் சமிக்ஞை விளக் குப் பகுதியிலிருந்த இராணுவத்தினர் உடனடியாக அந்த இடத்திற்குச் சென்று அவர்களைத் தடுக்க முற்பட்டனர்.

இதன்போது அந்தக் குழுவினர் இராணுவத்தினர் மீதும் தாக்குதல் நடத்தினர். இராணுவத்தினர் பதில் தாக்குதல் நடத்தத் தொடங்கியபோது அந்த குழுவினர் இடத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

எனினும் தப்பிச் சென்ற குழுலிருந்த ஒருவர் அப்பகுதியிலிருந்த இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். அது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியபோதும் ஒன்றரை மணித்தியாலத்துக்கு மேல் சம்பவ இடத்துக்குக் கோப்பாய் பொலிஸார் வரவில்லை.

பின்னர் அழைப்புகள் மேற்கொள்ளப்பட்ட போதே கோப்பாய் பொலிஸார் அந்த இடத்திற்கு வந்தனர். பஸ் சாரதி ஆசனத்துக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த 2 லட்சம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது எனப்பஸ் உரிமையாளரால் தெரிவிக்கப்பட் டுள்ளது.

மேற்படி பஸ் பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த தனியார் ஒருவருக்குச் சொந்தமானது. அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் இவ்வாறு வீதிகளில் பயணிப்போர் மற்றும் வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தும் குழு, அவர்கள் கொண்டுவரும் பொருள்களை, பணத்தைக் கொள்ளை இட்டுச் செல்லும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

கடந்த புதன்கிழமை சுன்னாகம் பகுதியிலிருந்து புத்தூர் பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த குடும்பத்தலைவர் ஒருவர் தாக்குத லுக்கு உள்ளானார். அவர் பயணித்த ஓட்டோவைக் கொள்ளைக்குழுவினர் நிறுத்தியுள்ளனர்.

அவர் ஓட்டோவை நிறுத்தாமல் செல்ல முற்பட்ட போது, அந்தக் குழுவினர் அவரை தலைக்கவசத்தால் தாக்கியதால் அவரது கையில் காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீண்டும் பிழை ....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த கால அனுபவத்தை வைத்து பார்க்கும் போது, தமிழர் ஆதரவு வாக்கினால் பதவிக்கு வந்து, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளால் மட்டுமே பதவியில் தொடர்ந்த சிறிசேனா – ரணில் அரசு சாதித்தது என்ன என்ற கேள்வி எழுகிறது. பச்சையாக சொன்னால், தமிழர்களுக்கு அந்த இரண்டு தென்னிலங்கை தலைவர்களும் கூட அல்வாதான் கொடுத்தார்கள்.

### காய் நகர்த்தல்

இந்தப் பின்னணியில், இலங்கை அரசுக்கு, போர்க்குற்றங்கள் மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற இரண்டு பிரச்சினைகள் குறித்து மட்டுமே சர்வதேசம் அழுத்தம் கொடுத்தால்தான், ஏதோ ஒரு விதத்தில் நல்ல முடிவு ஏற்படுமோ, என்று எதிர்பார்க்கலாம். இதில் கூட, போர்க்குற்றங்கள் குறித்த சர்வதேச விசாரணை என்பதில் தமிழர் தரப்பு தொடர்ந்து உறுதியாக இருந்தால், அதனால், அரசியல் தீர்வும் தொடர்ந்து பின்னடைவையே சந்திக்கும் எனலாம். ஏன், ஒரு தமிழரே, ஜனாதிபதியாக இருந்தாலும் இதுதான் உண்மை நிலை. இதுவே, நாட்டின் அரசியல் கள நிலைமையும் கூட.

தற்போது உக்ரைன் விவாகரத்தில், அமெரிக்காவிடமிருந்து அந்த நாட்டின் நேட்டோ கூட்டு நாடுகளான, ஐரோப்பவை சார்ந்த பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி மாறுபட்ட கருத்து கொண்டுள்ளன என்றே கருத இடமிருக்கிறது. இது, இந்தப் பிரச்சினை மட்டும் குறித்த விடயமல்ல. எதிர்வரும் ஆண்டுகளில், அமெரிக்க பொருளாதாரம் வீழ்ச்சி அடையும் என்றும், அதனால் ஐரோப்பாக் கண்டம், சர்வதேச அரங்கில் தனது பழைய முக்கியத்துவத்தை பெறும் என்றும் இந்த இரண்டு நாடுகளும் கணக்கிடுகின்றன.

இதனை நோக்கியே ஐரோப்பிய ஒன்றியம் காய் நகர்த்தி வருகிறது. அந்த விதத்தில் நேட்டோ என்பது, அமெரிக்கா உள்ளடங்கிய ஐரோப்பா சார்ந்த இராணுவக் கூட்டமைப்பு. இது, இரண்டாம் உலகப் போர் முடிந்த கால கட்டத்தில், ஐரோப்பிய கண்டத்தில் அன்றைய சோவியத் யூனியனின் விரிவாக்கத்தை தடுத்து நிறுத்துவதற்கான அமைப்பு. இப்போது, உக்ரைன் விவகாரம் காரணமாக அதனை உயிர்ப்பிக்க அமெரிக்கா முயல்கிறது. ஆனால், ஐரோப்பிய ஒன்றியம் என்பது, பொருளாதாரம் மற்றும் அரசியல் குறித்த அந்தக் கண்டத்தில் உள்ள நாடுகளை ரஷ்யா – எதிர் மட்டுமே உள்ளடக்கியது. அதற்கான ஒருமித்த வெளிநாட்டுக் கொள்கை இருந்தாலும், பாதுகாப்பு கொள்கையை வகுத்துக் கொள்வதில் காலதாமதம் ஆகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தில், அமெரிக்க உறுப்பினர் அல்ல.

இதன் காரணமாக, அமெரிக்காவை போலவே, ஆனால் தனியாக. ஐரோப்பிய ஒன்றியமும் தனக்கென ஒரு இந்தோ – பசுபிக் முன்னெடுப்பை கையில் எடுத்துள்ளது. இந்தியப் பெருங்கடலிலும் சரி, பசுபிக் பெருங்கடலிலும் சரி, பெரிய அளவில் எந்த நிலப்பரப்பையும் தங்களது கையில் வைத்திராத ஐரோப்பிய நாடுகள், இவ்வாறான முன்னெடுப்புகளை துவங்கும்போதே, அவர்களது எண்ணவோட்டம் புரிய வேண்டும். அதிலும் குறிப்பாக, அண்மையில் கொழும்பில் இது குறித்து நடைபெற்ற ஒரு கருத்தரங்கில், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கை பிரதிநிதிகள் பங்கெடுத்தார்கள் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த பின்னணியில், ஒவ்வொரு ஆறு மாதத்திலும் ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. சார்ந்த தெருக்கூத்தை நம்பி, தமிழர் தரப்பு உள்நாட்டிலும், சர்வதேசத்திடமும் அரசியல் செய்யுமேயானால், அதனால் எந்தவித முடிவுகளும் எட்டப்படாமலே போகலாம். இடைப்பட்ட காலத்தில், சர்வதேச அரசியல், பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்த பிரச்சினைகளும் கவலைகளும், தெற்காசியா மற்றும் சீனாவை விட்டு, மீண்டும் ஐரோப்பிய கண்டம் மற்றும் ரஷ்யா மீது திரும்புமேயானால், தமிழர் தரப்பிற்கு 'மீண்டும் பிழை விட்டோம்' நிலைமை மட்டுமே மிஞ்சும்!

காலைக்கதிர் Kalaikkathir

# அமைச்சர்களின் நடவடிக்கைகள் காட்டுகின்றது நாட்டின் நிலைமையை

## முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டு



நாட்டின் பொருளாதாரம் மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அமைச்சர்களின் நடவடிக்கைகள் மூலமாக இது தெரிவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கடனுக்கு வாங்கும் எண்ணெயை பாரமெடுப்பதற்கு அமைச்சர்கள் துறைமுகத்திற்கு செல்லும் துர்ப்பாக்கிய நிலை இந்த நாட்டில் உருவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள மட்டு.ஊடக அமையத்தில்நடைபெற்றஊடகவியலாளர்சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு-

இந்த அரசாங்கத்தில் பெற்றோலியத்துறை மற்றும் துறைமுகத்துறை அமைச்சர்கள் இந்தியாவிலிருந்து வரக்கூடிய பெற்றோல், டீசல் கப்பலுக்காக துறைமுகத்தில் காத்திருந்தனர்.

புதியதொரு கலாசாரத்தை நாட்டில் உருவாக்கியுள்ளார்கள். இவர்கள் உலகத்துக்கும் இங்குள்ள சிங்கள மக்களுக்கு இந்தியா தங்களுக்கு உதவி செய்துள்ளதாகக் காட்டுகின்றார்கள்.

இந்தியாவால் இலங்கைக்கு இலவசமாக வழங்கப்பட்டது போன்றுதான் அவர்கள் மக்களுக்கு அதனைக் காட்டினார்கள். ஆனால் இந்தியா இலங்கைக்கு இரண்டு மாத கடன் அடிப்படை யிலேயே அதனை வழங்கியது.

இலங்கை அரசியல் வரலாற்றில் எந்த அமைச்சர்களும் கப்பல் வரும் வரையில் காத்திருந்த சரித்திரம் இதுவரை இல்லை. புதிய கலாசாரம் ஒன்றை இந்த அரசாங்கம் உருவாக்கியுள்ளது. - என்றார்.

# யாழ்.மாவட்ட வெளியீட்டு பணியக அங்குரார்ப்பண நிகழ்வு இன்று

அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மாவட்ட வெளியீட்டுப் பணியகத்தின் அங்குரார்ப்பணநிகழ்வுஇன்று(வெள்ளிக்கிழமை) நடைபெறவுள்ளது.

வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமையில் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் அனுஷ்யல்பிட்டவின்பங்குபற்றுதலுடன் இன்று(வெள்ளிக்கிழமை) காலை 9.45 மணி முதல் ஆரம்பமாக உள்ளது.

அதனைத்தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்ட ஊடகவியலாளர்களுடனான சிநேகபூர்வ சந்திப்பும் யாழ்ப் பாணம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில்நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறப்புமிக்க கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா ஆரம்பம்!



ஈழத்தின் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாகப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்தும் 15 தினங்கள் இந்த ஆலய மஹோற்சவப் பெருவிழா இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி இரவு 7 மணிக்குப் பெரிய சப்பறத் திருவிழாவும், முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் - 10.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும், அன்றைய தினம் இரவு நான்கு சாமப் பூசையுடன் மகா சிவராத்திரி உற்சவம் சிறப்பாக இடம்பெறு வதுடன் மறுநாள் புதன்கிழமை காலை 6 மணிக்கு கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தோற்சவமும், அன்றைய தினம், மாலை 6 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் இடம்பெறவுள்ளன.

# எஸ்.ரி.எவ். அதிரடி 15 பேர் கைதாகினர்!

நாடளாவிய ரீதியில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக 6 மதுபானச் சுற்றிவளைப் புகளில் அறுவர் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன், 76 லீற்றர் மதுபானம், 685 லீற்றர் கோடா, ஒரு செப்புத் தகடு, 04 இரும்பு பீப்பாய்கள் என்பவையும்கைப்பற்றப்பட்டுள்ளன.

கம்பஹா, வத்தளை பிரதேசத்தில் மேற் கொள்ளப்பட்ட இரண்டு சுற்றிவளைப்புகளில் 140 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன்இருவர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொட்டுகொடமற்றும்வத்தளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 34 வயதுகளையுடைய இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர். கண்டி, தெல்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திகண பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 5 கிராம் 20 மில்லிகிராம் ஹெரோயினுடன் ரஜவெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு, கெசல்வத்த பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சட்டவிரோதமாக இந்நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட 9 ஆயிரத்து 400 புகைத்தல் பொருள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு 12 பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயது நபரே கைது செய்யப்பட்டுள்ளார். நுவரெலியா, பொகவந்தலாவை பிரிவுக் குட்பட்ட செப்பல்டன் சந்தி பிரதேசத்தில் லொறியொன்றில் 2 ஆயிரத்து 83 கிலோகிராம் கழிவுத் தேயிலையைக் கொண்டு சென்ற இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன் கழிவுத் தேயிலையும் கைப்பற்றப்பட்டுள்ளது.

பொகவந்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்த 36, 37 வயதுகளையுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர். கம்பஹா, கொஸ்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவரைப் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

இதன்போது மாணிக்கக்கல் அகழ்வுக்காகப் பயன்படுத்திய பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. கொஸ்கம, புவக்பிட்டிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 24, 35, 52 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

# ஹக் செய்யப்பட்டதாம் விமலின் முகநூல் கணக்கு



அமைச்சர் விமல் வீரவன்ஸவின் முகநூல் கணக்கு ஹக் செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் வீரவன்ஸவின் தனிப்பட்ட முகநூல் கணக்கிற்குள் எவரோத பிரவேசித்துள்ளார் எனவும் சில நாள்களாகவே தம்மால் முகநூலைப் பயன்படுத்த முடியவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முகநூல் கணக்கிற்குள் பிரவேசித்தவர் அதனை புதன்கிழமை பயன்படுத்த முயற்சித்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறெனினும்மீண்டும் முகநூல் கணக்கின் கட்டுப்பாட்டைத் தாம் பெற்றுக்கொண்டுள்ளேன் அமைச்சர் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

ஹெக் செய்யப்பட்ட காலப் பகுதியில் தனது கணக்கில் பதிவிடப்பட்ட பதிவுகள் தொடர்பில் ஆராய்ந்து பார்க்காது கருத்து வெளியிட்டோருக்காக இரக்கப்படுகிறேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கொரோனா காரணமாக பஸ் உரிமையாளர் வாழ்வாதாரத்தை உயர்த்த புதிய அமைப்பு





வவுனியா நெளுக்குளம் பகுதியில் பதியப்படாத பஸ் உரிமையாளர்கள் இணைந்து புதிதாக மணிகண்டன் போக்குவரத்து சேவைகள் சங்கம் என புதிய சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

கிராம மட்டங்களில் உள்ள பதியப்படாத பஸ்கள் அதாவது சில நிறுவனங்களை நம்பி ஒப்பந்தம் கைச்சாத்திடாமல் பஸ்களை சேவையில் ஈடுபடுத்தி பின்னர் குறித்த நிறுவனங்கள் பஸ் சேவைகளை இடைநிறுத்தி விடுகின்றனர்.

அவ்வாறு இடைநிறுத்தப்பட்ட பஸ்களை ஒன்றுதிரட்டிப் புதிதாக ஒன்று சேர்த்து உரிய முறையில் பிரதேசசபை, கிராம அலுவலர் அனுமதி பெற்று மாவட்ட அலுவலகத்தினரின் அனுமதியை பெற்று இந்தச் சங்கம் பயன்தரும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

45 வாகன உரிமையாளர்களை ஒன்று சேர்த்து இந்தச் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வருகின்ற பாடசாலை சேவைகள், திருமண விழாக்கள், ஏனைய நிகழ்வுகளுக்கு வாகனங்கள் தேவையாயின் எம்முடன் தொடர்பு கொண்டால் அவர்களுக்குத் தேவையான சேவைகளை வழங்கும் நோக்குடனே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொவிட் காரணமாக எமது வாழ்வாதாரம் பின்தங்கியுள்ளது. எனவே எமது வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடனேயே இந்தச் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆரம்பிப்பு நிகழ்வில் வவுனியா தெற்கு பிரதேசசபை தவிசாளர் த. யோகராசா, நெளுக்குளம் கிராம சேவையாளர் எஸ்.சாந்தரூபன், தனியார்பஸ்உரிமையாளர்சங்கதலைவர் இ. ராஜேஸ்வரன், ஓட்டோ உரிமையாளர் சங்கத்தலைவர் ரவீந்திரன், பார ஊர்திகள் சங்க தலைவர், பிரதேச சபை உறுப்பினர் மற்றும் குறித்த சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அத்தோடு இந்தச் சங்கத்தின் தலைவராக அமிர்தலிங்கம் அன்பரசன், செயலாளர் பி.பரந்தாமன், பொருளாளர் டனுசன் என 15 நிர்வாக உறுப்பினர்களைக்கொண்டு 45 பஸ் உரிமையாளர்களின் ஒத்துழைப்புடனும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கை வருகின்றார் அமெரிக்காவின் தூதர்!




இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான அமெரிக்காவின் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஜூலி சுங் இந்த வார இறுதியில் இலங்கை வரவுள்ளார்.

அவர் தனது நற்சான்றிதழ்களை அடுத்த வாரம் வெள்ளிக்கிழமை அரசாங்கத்திடம் கையளிப்பார் என்று அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. சியோலில் பிறந்த ஜூலி சுங் கொரிய, ஜப்பானிய, ஸ்பானிஷ் மற்றும் கெமர் மொழிகளில் சரளமாக பேசக்கூடியவர். கம்போடியாவின் புனோம் பென் நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் துணைத்தூதராகவும், தாய்லாந்தின் பேங்காக்கில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பொருளாதார ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார்.

ஈராக்கின் பாக்தாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் மாற்றம் ஒருங்கிணைப்பாளருக்கான தலைமைப் பணியாளராகவும் இருந்தார். கொலம்பியா, வியட்நாம் மற்றும் ஜப்பானில் உள்ள அமெரிக்க தூதரகங்களிலும், சீனாவின் குவாங்சோவில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகத்திலும் பணியாற்றியுள்ளார்.

கலிபோர்னியா- சான் டியாகோ பல்கலைக்கழகத்தில் தனது இளங்கலை கலைப் பட்டத்தையும், கொலம்பியா பல்கலைக்கழகத்தின் சர்வதேச மற்றும் பொது விவகாரப் பள்ளியில் முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

இந்நிலையில், கடந்த 10 ஆம் திகதி ஜூலி சுங் இலங்கைக்கான தூதுவராக பிரதி இராஜாங்க செயலாளர் வெண்டி ஆர். ஷெர்மனால் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

## ஊடகவியலாளர்களுக்கு நாட்டில் இருண்ட யுகம்!

### அரசு மீது ருவான் குற்றச்சாட்டு



தற்போதைய அரசின் கீழ் ஊடகவியலாளர்களுக்கும் சமூகசெயற்பாட்டாளர்களுக்கும் இருண்ட யுகம் ஒன்று உருவாகி வருகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

நாடு படுகுழிக்குள் தள்ளப்பட்டுள்ளது. அரசு தொடர்பில் விமர்சிப்பவர்களை அச்சுறுத்தும் செயற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சுதந்திர ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீடு தாக்கப்பட்டமை, சமூக செயற்பாட்டாளரான செஹான் மாலகே கைது செய்யப்பட்டமை போன்றவை இருண்ட யுகத்தையே நினைவுபடுத்துகின்றன எனவும் இதன்போது தெரிவித்தார்.

## சூப்பர் மார்க்கெட்டாக மாறுகின்றன வீடுகள்!

நாட்டின் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் வீட்டு சுப்பர் மார்க்கெட் வலையமைப்பை நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் ஒரு பெண் தேர்வு செய்யப்பட்டு அவரது வீட்டின் ஒரு பகுதியில் இந்த சுப்பர் மார்க்கெட் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதற்கமையத் தெரிவு செய்யப்படும் வீட்டை புதுப்பிப்பதற்கு அல்லது புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன. இதற்காக 1,500 கோடி ரூபா வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

சுப்பர் மார்க்கெட்டுக்குத் தேவையான நுகர்வோர் பொருள்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படவுள்ளதுடன் அனைத்து வீட்டு சுப்பர் மார்க்கெட் வலையமைப்புகளும் கணினி தொடர்பு மூலம் இணைக்கப்படவுள்ளன.

## செயலாளரைக் கடுமையாக திட்டிய இராஜாங்க அமைச்சர்

### அமைச்சரின் பதவிக்கும் ஆபத்து

பலம் வாய்ந்த அமைச்சு ஒன்றில் உள்ள இராஜாங்க அமைச்சர் ஒருவர் தனது அமைச்சின் செயலாளரைக் கடுமையாகத் திட்டியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று இது தொடர்பான செய்தியை வெளியிட்டுள்ளது.

மேற்படி அமைச்சர் விடுத்துள்ள கோரிக்கைகள் சட்ட விரோதமானவை எனவும் அவற்றை நிறைவேற்ற முடியாது எனவும் செயலாளர் தெரிவித்தமையே இதற்கான காரணம் எனவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், மேற்படி இராஜாங்க அமைச்சர் பதவி விலகும் வரை நிலைமை மோசமடைந்துள்ளதாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவிகளின் கழிப்பறைக்குள் கம்பஹாவில் இரகசிய கமரா!

கம்பஹாவில் பயிற்சி வகுப்பில் உள்ள பெண்கள் கழிவறையில் நவீன கமரா பொருத்தப்பட்டமை தொடர்பில் பொலிஸ் தகவல் தொழில்நுட்பப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார் என சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கம்பஹாவில் பயிற்சி வகுப்பில் உள்ள பெண்கள் கழிவறையில் கமெரா பொருத்தப்பட்டிருந்த சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாகச் சிறுவர் மற்றும் பெண்கள் விவகார பணியகத்திடம் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும், நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையெனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான மோசமான செயற்பாடுகள் நீண்டகாலமாக இடம்பெற்று வந்துள்ளன என மாணவிகள் சந்தேகம் வெளியிட்டுள்ள நிலையில், பலரும் அச்சமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் கம்பஹா பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள போதிலும் இதுவரை நியாயமான நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையிலேயே, மேற்படி சம்பவம் தொடர்பில் பொலிஸ் தகவல் தொழில்நுட்பப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சி வகுப்பின் உரிமையாளர் மற்றும் ஆசிரியர்கள் உட்பட 10 இற்கும் மேற்பட்டோரிடம் இருந்து வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இந்நிலையில், விரைவில் சந்தேகநபரைக் கைது செய்ய முடியும் என்று கம்பஹா பொலிஸ் உயர் அதிகாரி கூறியுள்ளார்.

## வெளிநாட்டுப் பிரஜைகளுக்கான பி.சி.ஆருக்கு 5 ஆயிரம் ரூபா அறவீடு!

யாழ்.போதனா வைத்தியசாலையில் வெளிநாட்டு கடவுச்சீட்டு உடையவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்காக 5ஆயிரம் ரூபா அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பிரஜைகள் மட்டுமே இலவச சுகாதார சேவைக்கு உரித்தானவர்கள். வெளிநாட்டுப் பிரஜைகள் தங்கள் மருத்துவ செலவுகளுக்காக உரிய கட்டணங்களை அரசாங்க வைத்தியசாலைகளுக்கு செலுத்தியே ஆகவேண்டும்.

இதன் அடிப்படையிலேயே வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கு கட்டணமாக 5 ஆயிரம் ரூபா அறவிடப்படுகின்றது. இந்தப் பணம் உரிய முறையில் அரசாங்கத்தின் கணக்கில் வைப்பிலிடப்படுகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இந்தச் சேவையைப் பெற்றுக் கொள்வோர் எதிர் மறை முடிவாயின் நேரடியாக விமானநிலையம் செல்லமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தங்கம் வென்ற முல்லை மகள் இந்துகாதேவிக்குக் கௌரவம்!




பாகிஸ்தானில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச குத்துச்சண்டைப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்று இலங்கைக்குப் பெருமையைத் தேடித்தந்த முல்லைத்தீவு மாவட்ட வீராங்கனை கணேஷ் இந்துகாதேவியைக் கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த புதன் கிழமை இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இதன்போது அவர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமையுடன் அவருக்கு ஒரு லட்சம் ரூபா பணப்பரிசும், அன்பளிப்புகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தின் தலைவர் ச.குகதாசன் உட்பட சங்கத்தின் ஏனைய உறுப்பினர்களும் நலன்விரும்பிகளும் கலந்து சிறப்பித்தனர்.

கணேஷ் இந்துகாதேவி கடந்த மாதம் 18 ஆம் திகதி பாகிஸ்தான் லாகூர் நகரில் இடம்பெற்ற இரண்டாவது சிறிலங்கா பாகிஸ்தான் சவேட் குத்துச்சண்டை போட்டியில் தங்கப் பதக்கம் வென்று முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மாத்திரம் இல்லாமல் நாட்டுக்கும் பெருமை சேர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# ஊடக ஜாம்பவானுக்கு நினைவு முத்திரை!













ஊடக ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம் ஜனன தின நூற்றாண்டு (1921 - 2021) விழாவும், ஞாபகார்த்த முத்திரை வெளியீடும் புதன்கிழமை மாலை ஸ்ரீ சத்ய சாயி, சீரடி பாபா (கொழும்பு) மத்திய நிலையத்தின்அறங்காவலரும் தலைவருமான எஸ்.என். உதயநாயகம் தலைமையில் கொழும்பு - 13 சாயி நிலையத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி. இராதாகிருஷ்ணன். நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் ஆகியோருக்கு முதல்நாள் ஞாபகார்த்த முத்திரை உறையை பிரதி தபால் மா அதிபர் திஸரகுமார வழங்கிவைக்கின்றமையையும், தலைவர் அருகில் எஸ். என். உதயநாயகம் நிற்பதையும் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.





# அறிவு வழிபாட்டில் அறிவு ..........

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலக அறிவும் அறிவே என்றாலும் அதனைத் துணையாகக் கொண்டு மெய்ப்பொருளான இறைவனை அறியும் அறிவே மெய்யறிவு அல்லது மெய்ஞானம் எனப்படுகின்றது. பேரறிவாக இருக்கின்ற சிவப்பரம் பொருளை அறிந்து அவ்வறிவினை உணர்தலே மெய்யுணர்வு எனப்படுகின்றது. இறை அறிவினைப் பெறுவதற்கும் மேலான ஓர் அறநெறி அல்லது அறிவுநெறி உலகத்தில் இல்லை. அப்படி இருப்பதாக ஏதாவது ஒரு சமயமோ அல்லது கொள்கையோ இருக்குமானால் அது நல்ல சமயமோ அல்லது கொள்கையோ ஆகாது. இறைஅறிவை விட்டு விலகிய எந்தக் கொள்கையும் சமயமும் உயிருக்கு உண்மையான மெய் அறிவையும் அதனால் விளையும் மெய் உணர்வையும் கொடுக்காது என்பதனை, ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை, ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று, ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவாம், ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே என்கின்றார் திருமூலர்.

உயிர் சிவஅறிவு பெறுவதற்குச் செய்யப்படுகின்ற செயற்பாடுகளை வழிபாட்டுச் செயல்முறைகள் அல்லது சமயநெறி என்கின்றோம். சமயநெறி என்பது பொதுவான நற்பண்புகளையும் குறிப்பாகச் சமய வழக்கில் நன்னெறி நான்கு எனப்படும் சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்பவற்றையும் குறிக்கும். இவற்றின் வழி இறைஅறிவைப் பெற முயலுவதனையே வழிபடுதல் என்பர். இறைவழிபாட்டில் இயற்றப்பெறும் செயல் முறைகளாகிய விளக்கேற்றுதல், மணியை ஒலித்தல், தூபதீபம் காட்டுதல், திருமுறைகள் ஓதுதல், திருநீராட்டுதல், திருவமுது அளித்தல், திருநீறு அணிதல், கணிகை மணி அணிதல், திருக்கோயில் வழிபாடு இயற்றுதல், ஆலயத் திருத்தொண்டுகள் செய்தல் இவை அனைத்துமே சிவ அறிவைப் பெற செய்யப்படும் முயற்சிகளாம், தவிர, நீண்ட பூசனைகள் இயற்றுதல், அகத்தவமான சிவயோகம் எனப்படும் சிவச்செறிவினை இயற்றுதல் இவை அனைத்துமே சிவஅறிவைப் பெற்று மெய்யுணர்வினைப் பெறுதற்கான வாயில்களாம் என்பதனைத் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

வழிபாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் நமக்கு சிவஅறிவு வளர்வதற்குத் துணையாய் நிற்கின்றதா என்பதனை உணர்ந்து இயற்றுதல் முதன்மையானது. இவ்வாறு நம் இறைஅறிவை பெருக்கும் ஒவ்வொரு செயலின் வழியும் நம் உயிரானது இறைஅறிவினைப் பெறுவதற்குத் தயாராகிச் செவ்வியடைந்து நிற்கப் பேரறிவாளனாகியா அச்சிவப் பரம்பொருள் நமக்கு மெய்யறிவினை நல்குவான் என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். இறைஅறிவு பெறுவதற்கு வாயிலாக அமையும் இச்செயல் முறைகளையே பிடித்துக் கொண்டு அதற்கே முதன்மைக் கொடுத்து அதனால் விளையும் பயனை எண்ணாது இருப்பது ஏணியைக் கொண்டு மேலே ஏறுகின்ற ஒருவன் அவ்வேணியைப் பயன்படுத்தி மேலே சென்று பெற வேண்டியதைப் பெறாமல் அவ்வேணியைப் பிடித்துக் கொண்டு மயங்கி நிற்றலைப் போன்றதாகும் என்று குறிப்பிடுவர். இன்னும் சிலர், உண்ணாது இருத்தல், உறங்காது இருத்தல், கொல்லாமை, புலால் உண்ணாமை, ஐம்பொறி அடக்கல், பிற உயிர்கள் மீது இரக்கம் கொள்ளல், பிற உயிர்களுக்கு உதவி செய்தல் போன்றவற்றை ஒரு வழிபாடாகவே கொள்வர். இவையும் சிவஅறிவைப் பெற முயலுகின்ற முயற்சியின் முதற்படியே ஆகும் என்கின்றார் திருமூலர். இவற்றிற்கும் மேலாக அறிவு வழிபாட்டில் பெற வேண்டிய அறிவினைத் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

அறிவு வழிபாட்டில் பெற வேண்டிய உண்மைச் சிவ அறிவு என்பது என்னவெனில், சிவனது பேர் அகண்டிதத்தினுள்ளே அடங்கி இருக்கின்ற இவ்வுலகமும் இவ்வுலகத்தின் உள்ளே உள்ள பிற பொருள்களும் சிவனது உடைமை. இவ்வுலகத்திலே உள்ள பொருள்களும் அப்பொருள்களைத் துணையாகக் கொண்டு வாழும் உயிர்களும் அவனுடைய உடைமைப் பொருள்கள். அச்சிவனுக்கு அடிமையாகவும் அவனுக்கு உரிமைப் பொருளாகவும் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதனை உணர்தலே உண்மையான மெய்யறிவு என்கின்றார் திருமூலர். இதனை உணர்ந்து சிவனிடத்து ஏற்படும் அன்பின் மிகுதியால் என்றும் அவனை இடைவிடாது எண்ணுதலினால் கிடைக்கப் பெறுவதே அவனின் திருவருள். உலகத்தில் உள்ள உயிரற்றப் பொருள்கள் யாவும் சிவனது உடைமை, உயிருள்ள அறிவுடைய பொருள்கள் யாவும் அவனது அடிமை என்பதனை வழிபாட்டில் எவ்வகையாலும் உணர்வதே அறிவு வழிபாடு என்பதனைத், தன்பால் உலகம் தனக்கருகாவதும், அன்பால் எனக்கருளாவது மாவன, என்பார்கள் ஞானமும் எய்தும் சிவோகமும், பின்பாலின் நேயமும் பெற்றிடுந் தானே என்கின்றார் திருமூலர்.

இதனால் சமய உண்மைகளை ஆராய்வோரும் சமய நெறிகளில் சிறந்தோரும் அவர்தம் ஆராய்ச்சியால், தம் முயற்சியால், 'யான்' என்று தன்னையே உயர்வாகவும் இறைவனாகவும் கருதுகின்ற அகமயக்கமும் அறிவுக் குற்றமும் உடையவர் மெய்யறிவு உடையவர் அல்லது மெய்ஞானி ஆகார். கிட்டுவதை எல்லாம் என்னுடையது என்று பிழையாக உணரும் புறமயக்கமும் பற்றும் நீங்கி எல்லாம் சிவனது அடிமையும் உடைமையும் என உணர்பவர்களே உண்மையான சிவ அறிவாளர்கள் என்கின்றார் திருமூலர். நான் யார் என்று ஆராய்கின்றவன், தன்னை இன்னான் என அறிதல் சிவஅறிவு பெறுதல் என்கின்றார் திருமூலர். தமது அறிவிற்குச் சிவனது அருளே முதலாகி நிற்கின்றது என்பதனை உணரும் உணர்வு முதன்மையானது என்கின்றார். அவ்வுணர்வால் சிவனது பேர் அறிவிற்கும் பேர் அருளுக்கும் முன்னால் அடங்கி நிற்கும் அடக்கமும், அடங்கி நிற்கின்றமையால் அச்சிவனை மறவாது எண்ணி உணர்கின்ற உணர்வால் அச்சிவனிடத்து அன்பு பெருகும் என்கின்றார். இவ்வன்பின் துணையால் அறிவிலே இறைவனை மறவாது இருக்கின்ற முறையினை உணர்ந்த சிவ அறிவாளர்களுக்கே இவ்வுலகமாகிய இருள் நீங்கிச் சிவஅறிவாகிய சிவஒளி ஒளிவிடும் என்கின்றார் திருமூலர்.

சீலம், நோன்பு, செறிவு ஆகிய நன்நெறிகள் மூன்றினால் இயற்றப் பெற்ற வழிபாடுகளை விடுத்து மெய்யறிவு நூல்களை ஓதுதல், பிறருக்கு அவற்றை ஓதுவித்தல் மெய்யறிவு செய்திகளைக் கேட்டல், பிறரைக் கேட்பித்தல், குற்றமற்ற மெய்ப்பொருளான இறைவனின் திருவருளை இடைவிடாது சிந்தித்தல் போன்றவற்றை அறிவுப் பூசனை என்று சிவஞான சித்தியார் எனும் மெய்கண்ட நூல் குறிப்பிடுகின்றது. இதனையே திருமூலரும் குறிப்பிடுகின்றார். மேற்கூறிய மெய்யுணர்வு பெறுதலுக்குக் கேட்டல், எண்ணுதல், தெளிதல், அதில் அழுந்தி நிற்றல் என்பன மெய்யுணர்வு அல்லது அறிவு வழிபாட்டிற்கு இன்றியமையாத வாயில்கள் என்கின்றார் திருமூலர். வழிபாடு என்றால் வெறும் செயல் முறைகள் மற்றும் பூசனைகள் மட்டும் என்று நின்று விடுதல் ஆகாது. அவற்றின் பின்னே புதைந்துள்ள அறிவுக் கூறுகள் எவை என்பதனை எண்ணி உணர்தலே அறிவு வழிபாட்டில் அறிவாகும். இவற்றை எண்ணி உணர்வதற்கு சில அடிப்படையான தேடல்கள் முதன்மையாகின்றன. தமிழ்ச் சைவர்களாய் இருப்பின் அத்தேடலின் விளைவாக, நமக்குரிய நெறி சித்தாந்த சைவம். நம் இறை போற்றிப் பாடல்கள் திருமுறைகள். நம் இறை உண்மை நூல்கள் பதிநான்கு மெய்கண்ட நூல்கள். நாம் பின்பற்ற வேண்டிய அருளாளர்கள் நாயன்மார்கள். நாம் ஓத வேண்டிய மூல மந்திரம் திருவைந்து எழுத்து. நாம் அணிய வேண்டிய சின்னங்கள் திருநீறு, கணிகைமணி என்பவை. நாம் பின்பற்ற வேண்டிய நன்னெறி நான்கு சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்பவை கிட்ட வேண்டும். இவ்வாறானவற்றை எண்ணிப் பார்த்தாலே அறிவு வழிபாட்டில் தலைப்பட்டு முறையான இறைவழிபாட்டில் சென்று சிவஅறிவினைப் பெறுவோம் என்பது திண்ணம். இன்பமே எந்நாளும் துன்பமில்லை!

காலைக்கதிர் Kalaikkathir

## ஜெனிவாக் கூட்டத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மொத்தம் 47 நாடுகள் பேரவையில் அங்கம் வகிக்கின்றன. இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை சுழற்சி முறையில் அங்கத்துவம் வழங்கப்படும். மேற்படி நாடுகளுக்கு வாக்குரிமை உண்டு. ஏனைய நாடுகள் கண்காணிப்பாளர்களாக பங்கேற்கலாம்.

அந்தவகையில் இம்முறை இலங்கை, மியன்மார், ஆப்கானிஸ்தான் உட்பட மேலும் சில நாடுகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது. அரச சார்பற்ற அமைப்புகளால் நடத்தப்படும் உப மாநாடுகளிலும் மேற்படி நாடுகள் முக்கிய இடத்தைப் பிடிக்குமென இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் முன்வைக்கப்படவுள்ள வருடாந்த அறிக்கையில், இலங்கை விவகாரம் தொடர்பிலும் பிரஸ்தாபிக்கப்படவுள்ளது. அது தொடர்பில் மார்ச் 03ஆம் திகதி விவாதமும் இடம்பெறவுள்ளது.

சர்வதேச மட்டத்தில் ஜெனிவாக் கூட்டத்தொடரே இலங்கை சந்திக்கும் மிகப் பெரிய இராஜதந்திர சமராக இருக்கின்றது. குறிப்பாக 2012ஆம் ஆண்டு முதல் இலங்கை தொடர்பில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. எந்தவொரு வாக்கெடுப்பிலும் இலங்கை வென்றதில்லை. எனினும், சீனா, ரஷ்யா, கியூபா உள்ளிட்ட நாடுகளின் ஆதரவுடன் அழுத்தங்களை சமாளித்து வருகின்றது.

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் பொறுப்புக்கூறப்பட வேண்டும், பாதிக்கப்பட்ட தரப்புக்கு நீதி நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை, போருக்கு பின்னரான காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டு வருகின்றன.

ஆரம்பத்தில் உள்ளகப் பொறிமுறை ஊக்குவிக்கப்பட்டாலும், அவற்றை செயற்படுத்துவதில் இலங்கை அரசு ஆமை வேகம் காட்டியது. இதனால் அனைத்துலக சமூகம் கடும் அதிருப்தியில் இருந்தது. காத்திரமான தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. குறிப்பாக பொருளாதாரத் தடைக்கான நகர்வுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த தருவாயிலேயே 2015 இல் முன்கூட்டியே மஹிந்த ராஜபக்ஷ தேர்தலுக்குச் சென்றார்.

அத்தேர்தலில் மஹிந்த தோல்வி கண்டார். இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மைத்திரி தலைமையில் உதயமான நல்லாட்சி அரசு, சர்வதேச சமூகத்துக்கு சாதகமான சமிக்ஞைகளை வெளிப்படுத்தியது. ஜெனிவாத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கவும் இணங்கியது. இதனால் இலங்கைக்கு உள்ளகப் பொறிமுறையை செயற்படுத்துவதற்கு ஒன்றரை வருடங்கள் அவகாசம் வழங்கப்பட்டது.

அதன்பிரகாரம் இழப்பீட்டு பணியகத்தை அமைத்தல், நல்லிணக்க செயலணி, புதிய அரசமைப்பு, பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தம் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், இடைநடுவில் திட்டங்களை மைத்திரி தரப்பு குழப்பியது. சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றப்படவில்லை.

மீண்டுமொருமுறை உள்ளகப் பொறிமுறை தோல்வி கண்டது. இதனால் சர்வதேச பங்களிப்புடனான பொறிமுறையே வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. 2019 இல் ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு, நல்லாட்சி வழங்கிய இணைஅனுசரணையை விலக்கிக்கொண்டது, அழுத்தங்கள் தொடர்ந்தால் மனித உரிமைகள் பேரவையில் இருந்து விலகுவோம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மறுபுறத்தில் பொறுப்புக்கூறும் பொறிமுறை செயற்படுத்தப்படவில்லை.

இந்நிலையில், அனைத்துலக சமூகம் தற்போது நடவடிக்கையில் இறங்குவதற்குத் தயாராகிவிட்டது.

## ஜெனிவாக் களத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவாவில் இம்முறை இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளரின் எழுத்துமூல அறிக்கை மாத்திரமே முன்வைக்கப் படவுள்ளது. இலங்கைக்கு எதிராக எந்தப் பிரேரணைகளும் இம்முறை கொண்டு வரப்படமாட்டா.

ஏற்கனவே இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் தற்போது அலட்டிக்கொள்ள நாம் விரும்பவில்லை. ஏனெனில் அந்தத் தீர்மானங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது நிலைப்பாட்டை சர்வதேசத்துக்கு அறிவித்துவிட்டார்.

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இம்முறை இலங்கைக்கு எதிராக ஏதாவது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டால் அதை எதிர்கொள்ள நாம் தயாராகவே இருக்கின்றோம். நாட்டின் இறையாண்மையை மீறி எந்தத் தரப்பும் எமக்குச் சவால்விட முடியாது; நாமும் அடிபணியத் தயாரில்லை – என்றார்.

## ஆணையாளரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 49 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் இம்மாதம் 28ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இம்முறை இலங்கை தொடர்பான எழுத்துமூல அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் முன்வைக்கவுள்ளார். அந்த அறிக்கை மிகவும் காட்டமாக இருக்கும் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளரின் எழுத்துமூல அறிக்கையைப் பார்த்த பின்னரே அது தொடர்பில் எம்மால் பதிலளிக்க முடியும். எனினும், அந்த அறிக்கை இலங்கைக்குச் சவாலாக அமையாது என்றே நாம் நம்புகின்றோம்.

இந்த அறிக்கை எமக்குப் புதிய விடயம் அல்ல. அறிக்கைகள் அல்லது தீர்மானங்கள் மூலமாக இலங்கையைக் கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில் இலங்கை வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுகின்றது.

சர்வதேசத்தைப் பகைக்க நாம் விரும்பவில்லை. சர்வதேசத்துடன் இணைந்து செயற்பட நாம் தயாராகவே இருக்கின்றோம்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் எழுத்துமூல அறிக்கை வெளிவந்த பின்னர் இலங்கையின் நிலைப்பாட்டை மாநாட்டில் வைத்து அறிவிப்போம்.

## மகனைக் கடத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்த தனது மகனைக் கடத்திச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், சந்தேகநபர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தனது மனைவியின் கை – கால்களை கூரிய ஆயுதங்களால் தாக்கியுள்ளார் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்த சந்தேகநபரைக் கைதுசெய்ய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் இரவு குறித்த நபர் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தி, தனது மகனை கடத்திச் சென்றார். இந்நிலையில், குறித்த நபருக்கும் பொலிஸாருக்கும் இடையே நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

## இந்திய மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பாகவும் கேட்டறிந்தார்.

நோர்வேத் தூதுவர் தனது பயணத்தின்போது மன்னார் மவட்ட அரச அதிபரிடம், 'இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் ஊடுருவுவதால் இலங்கை மீனவர்கள் அதாவது மன்னார் மாவட்ட மீனவர்களும் பாதிக்கப்படுகின்றனர் என்றுசெய்திகள் வருகின்றன. அதன் நிலைமை தற்போது எவ்வாறு உள்ளது?' எனக் கேட்டறிந்தார்.

இந்த விடயத்துக்குப் பதிலளித்த மன்னார் மாவட்ட அரச அதிபர், இந்திய மீனவர்களின் வருகையால் மன்னார் மீனவர்கள் அதிகம் பாதித்த நிலையில் குறித்த விடயம் கடற்படையினரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதால் எல்லை தாண்டும் இந்திய மீனவர்கள் தற்போது கைதுசெய்யப்படுகின்றனர். இதன் காரணமாக இந்திய மீனவர்களின் வருகை தற்போது ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று பதிலளித்தார்.

இந்த விஜயத்தின்போது மவட்டத்தின் அபிவிருத்திப் பெண்கள் மேம்பாடு தொடர்பாகவும் தூதுவர் கேட்டறிந்தார்.

இதன்போது மாவட்ட அரச அதிபரால் தூதுவருக்கு நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது. இந்தச் சந்திப்பில் மன்னார் மாவட்டத்தின் மேலதிக அரச அதிபர் குணபாலனும் கலந்துகொண்டார்.

## பஸிலின் டில்லி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் உருத்திரகுமாரனின் கடிதமொன்று புதுடில்லிக்குச் சென்றுள்ளது.

கடுமையான அந்நியச் செலாவணி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கையை மீட்டெடுக்கும் முகமாக அத்தியாவசியப் பொருள்களுக்கும் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்யவும் உணவு இறக்குமதிக்காகவும் மற்றும் அந்நிய செலவானி இருப்பைக் கட்டியெழுப்பவும் 900 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தியாக கடனாக வழங்கவுள்ளது.

இந்நிலையில், இலங்கைக்கான இந்தியாவின் நிவாரண நிதியுதவிகள் செயலாக்க உறுதிப்பாட்டின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் எனப் இந்தியப்பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிய கடிதத்தில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் 1.4ம் சரத்தில் குறிப்பிட்டவாறுஇ இலங்கைத்தீவின் வடக்கு – கிழக்கு பகுதி தமிழர்களின் தாயகம் என்பதனை உறுதியான செயலாக்க உத்தரவாதத்துட னேயேஇ சிறிலங்காவுக்கான எந்தவொரு உதவிகளும் வழங்கப்பட வேண்டும் எனக் கோரியுள்ள பிரதமர் வி.உருத்திர குமாரன் மூன்று முக்கிய விடயங்களை உறுத்திப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தைச் செயலாக்க வேண்டும், இலங்கைத் தீவின் வடக்கு – கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் சிங்களக் குடியேற்றங்களை நிறுத்த வேண்டும், தமிழர் பகுதிகளுடன் சிங்களக் கிராமங்களை இணைத்து தமிழர் பகுதிகளின் எல்லை வரையறை செய்வதை நிறுத்த வேண்டும் எனவும் வி. உருத்திரகுமாரன் வலியுறுத்தியுள்ளார்.

## பக்தர்கள் இன்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

அதற்கமைய, அருட்தந்தைகளின் பங்கேற்புடன் மாத்திரம் திருவிழாவை நடத்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

500 பக்தர்களை அனுமதிப்பதாக யாழ். மாவட்டம் ரீதியாக தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும், இம்முறை யாத்திரிகர்களை அனுமதிப்பதில்லை எனவும், அருட்தந்தைகளின் பங்கேற்புடன் மாத்திரம் திருவிழாவை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சரவைக்கு ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்றார்.

## சமுதித்த வீட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதனை அண்டிய பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி. கமராக்களின் காணொளிக் காட்சிகள் தொடர்ந்தும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம், ஒரு வார காலத்தில் பதிவான காணொளிகளை ஆய்வுக்கு உட்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீட்டின் மீது தாக்குதல் நடத்திய ஆயுததாரிகள் வெள்ளை வானில் தப்பிச் சென்றிருந்தனர்.

இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் உள்ளிட்ட 60 பேர் அடங்கிய 9 விசேட விசாரணைக் குழுக்கள் தொடர்ந்தும் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றன.


அதனடிப்படையில், இதுவரை 86 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதேவேளை, ஹிரு தொலைக்காட்சியின் சிரேஷ்ட ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் சரியான தகவல்களை வழங்குபவருக்கு 5 இலட்சம் ரூபா வெகுமதியை வழங்க ஹிரு ஊடக வலையமைப்பு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, தாக்குதலை நடத்திய சந்தேகநபர்கள் தொடர்பிலோ அல்லது அவர்கள் பயணித்த வாகனம் தொடர்பிலோ தகவலறிந்தால் 0770 322 821 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக ஹிரு சி.ஐ.ஏவுக்குத் தகவல் வழங்க முடியும்.

அவ்வாறு தகவல் வழங்குபவரின் அடையாளம் பாதுகாக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்



### செல்லத்துரை செல்லையா (சின்னத்துரை)

மந்துவில் வடக்கு, கொடிகாமம் குடியிருப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை செல்லையா (சின்னத்துரை) நேற்று (17.02.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை செல்லம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற மகாலக்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற உதயக்குமாரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, தாமோதரம் பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், தா.இரத்தினத்தின் மைத்துனரும், கணேசபாலேந்திரன் (ஓய்வுநிலை அதிபர் – யா/கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம்), தவராசா (மக்கள் வங்கி – யாழ்ப்பாணம்), இராஜகுமாரி (மலேசியா), தர்மராஜா (லண்டன்), கலையுணர்பவன் (கனடா) ஆகியோரின் பெரிய தந்தையும், சிவறஞ்சினி, வாணிஸ்ரீ (ஆசிரியர் – யா/வரணி மத்திய கல்லூரி), சுரேஸ்குமார் (மலேசியா), மைத்ரேஜி (லண்டன்), சிவசுகி, (கனடா) ஆகியோரின் மாமனாரும், கலைச்செல்வன் – தர்சிகா (லண்டன்), கதிர்ச்செல்வன் (யாழ்.மாவட்ட செயலகம்) – நித்தியா, கலையழகன், கலைவேந்தன் (புகையிரத நிலைய அதிபர் – கோட்டை), ஜீவிதன் (மாணவன்), பிரணவன், திவ்யா, மாதினி, நிதிக்கா, வர்சிகா, லக்கீஸ் ஆகியோரின் பேரனும், அக்ஷயனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மந்துவில் வடக்கு கொடிகாமத்தில் உள்ள எமது இல்லத்தில் இன்று (18.02.2022) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு இடம்பெற்று, பின் பூதவுடல் ஞானிகாடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: த.கணேசபாலேந்திரன் (பெறாமகன்)**
**(ஓய்வுபெற்ற அதிபர்)**



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 284**

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**719.இப்படியான சம்பவங்கள் தமிழ் மக்களின் இனப்படுகொலை என்ற கோரிக்கையைப் பாதிக்குமா?**

இனப்படுகொலை என்பது பொதுவாக சர்வதேச ரோம் சட்டத்தின் அடிப்படையில் நிறுவப்படுவது. ரோம் சட்டத்தின் கீழ் அதை ஆராய சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு அந்தச் சம்பவங்கள் ஐ.நாவின் பாதுகாப்பு சபையினாலோ அல்லது அதன் பொதுச்சபையாலோ பாரப்படுத்தப்பட வேண்டும். அங்கு அவை சர்வதேசத்தின் அரசியலாகிறது. இந்த



இந்திரா காந்தியும் வைகுந்தவாசனும்

வகையில் சர்வதேசத்தின் ஒவ்வொரு நாட்டின் பார்வையும் அவர்களது நாட்டின் பிரச்சினைகளை ஒட்டியதின் அணுகுமுறைகளிலோ அல்லது அவர்கள் இணைந்திருக்கும் குழுமங்களின் அபிப்பிராயங்களிலோ அமையும்.

அதைத்தவிர இனப்படுகொலை என ஒரு பலம் வாய்ந்த அரசு அரசியல் ரீதி



ஜே.ஆர்.ஜெயவர்த்தனா

யாக தீர்மானம் எடுத்து அதற்கு செயல் வடிவம் கொடுக்கலாம்.

இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது 16 ஓகஸ்ட் 1983 தனது நாடாளுமன்ற உரையில் இலங்கையில் நடைபெறுவது இனப்படுகொலை என்றே வர்ணித்தார். அந்த அடிப்படையில் தீர்வுக்கான முஸ்தீபுகளையும் மேலெடுத்தார்.

அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நேரத்திலும் தமிழ் மக்களின் செயற்பாட்டாளர் கிருஷ்ணா வைகுந்தவாசன் எழுதிய மகஜருக்குப் பதிலளித்தபோது "இன்றைக்கு ஆட்சியிலிருக்கும் ஜனதா ஆட்சி இலங்கையோடு முறையற்ற வழியிலே உறவு கொண்டிருக்கின்ற – நடத்திக் கொண்டிருக்கின்ற – ஓர் ஆட்சி. எனவே இவர்களிடத்தே இலங்கைத் தமிழர்களுக்கான நன்மைகளை எதிர்பார்க்க முடியாது. தேர்தல் நேரமாக இருக்கிற காரணத்தினால் எல்லோருடைய கவனமும் தேர்தலிலே இப்பொழுது சென்று கொண்டிருக்கின்றது. எனினும் மக்கள் மத்தியிலே இந்தப் பிரச்சினையை வைத்து இலங்கை தமிழர்களுக்காக நான் போராடுவேன்" – என்று பதிலளித்திருந்தார்.

ஆனால் செப்ரெடம்பர், ஒக்டோபர் 1985 இல் இந்திரா காந்தியின் மறைவுக்குப் பின் – ராஜீவ் காந்தி பிரதமராகப் பதவியேற்றதின் பின் – இந்திய நிலைப்பாட்டிலேயே பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. இனப்படுகொலைக்கும் வன்முறைக்குமான வித்தியாசங்களை அவரது ஆட்சியின் திணைக்களங்களோ ராஜீவ் காந்தியோ அறியாதவர்களல்லர். ஆனால் அவர்களது நிலைப்பாடும் பேட்டிகளும் இலங்கையின் உண்மையான பிரச்சினை வன்முறையே என்றும், இவற்றை ஆரம்பித்தவர்கள் தமிழ் மக்களே எனவும் ஓர் திடீர்த் திருப்பம் கண்டது. சன்சோனி கமினின் அறிக்கைகளின் தெரிவுகளும் தொடர்ந்த கொரில்லா யுத்தமும் அவற்றை இனப்படுகொலை ஆக்காது வன்முறைக்குள் அடைத்து இணக்கங்கள் காண முற்பட்டன.

பின்னர் தொடர்ந்த சம்பவங்களினாலும், 9/11 இரட்டைக் கோபுரத் தாக்குதலில் ஏற்பட்ட உலகின் மாற்றங்களாலும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் பயங்கரவாதமாக சித்திரிக்கப்பட்டு விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகளாக அழிக்கப்பட்டார்கள்.

ஆகவே ஸ்ரீலங்கா அரசு இந்தச் சம்பவங்களையெல்லாம் தங்களுக்கு ஆதாரமாகத் துணை சேர்க்கும். முள்ளிவாய்க்காலின் போது பதவியிலிருந்தது காங்கிரஸ் அரசு. மன்மோகன் சிங் பிரதமராக இருந்தார். சர்வதேசத்துடன் ஒத்துழைத்தார்கள். இப்பொழுது பதவி வகிப்பது பி.ஜே.பி. அரசு. மோடி அதன் தலைவராக இருக்கின்றார். அவர் வட இந்திய மாகாணங்களை மையப்படுத்தி வரக்கூடிய ஆசனங்களைக் கணக்கெடுத்து அரசியல் செய்கிறார். ஹிந்துத்வா அவர்களது மதக்கொள்கை. அது முஸ்லீம்களின் அதிகாரங்களை மட்டுப்படுத்தும் போக்கைக் கொண்டது. ஆனால் கௌதம புத்தரை இந்து மதத்தின் அவதாரமாகவே பார்க்கிறது. ஆகவே பௌத்தத்தைப் பரப்புவது (திணிப்பாகக் கருதாமல்) பிழையல்ல என்ற வாதம் அவர்களில் பலரிடம உண்டு.

**720.சிங்கள பேரினவாதம் நடத்தியது இனப்படுகொலையல்ல என்ற அணுகுமுறையையும் இணக்கப்பாட்டையும் தமிழ் மக்கள் கடைப்பிடித்தால், சிங்கள மக்களின் மனோபாவத்தில் நீதியாக தமிழ் மக்கள் நடத்தப்பட வேண்டும் என்ற எண்ணங்கள் வளருமா?**

உண்மையான – நேசமான – இணக்கம் நிறைந்த – வாழ்வு இனங்களுக்கிடையே ஏற்பட பல காலங்கள் செல்ல வேண்டும்.

ஆனால் பெரும்பான்மைக் கட்சிகள் இப்பொழுதும் ஆதரவுத் தளத்துக்கு சிங்கள – பௌத்த பெரும்பான்மை வாக்குகளை நம்பியிருக்கும் வரை அதற்கு வாய்ப்புகள் அரிது. அவர்களிடமிருந்து ஒரு தேசிய தலைவர் உருவாவதையும் காண்பதற்கில்லை.

சுதந்திரம் கிடைத்த நாள்களிலிருந்தே சிங்கள மக்கள் மற்ற இனத்தவரை எப்படி இணக்கமாக சேர்த்து நடத்துவது எனப் பார்க்காது, அவர்களை எப்படி தாங்கள் ஒன்று சேர்ந்து ஒதுக்கலாம் என்றுதான் வழி பார்த்தார்கள். அந்தப் பார்வைகளின் பாதைகளில் இப்பொழுது இலட்சியமாக்கப் படுவதுதான் 'ஒரே நாடு; ஒரே சட்டம்' என்பது.

இந்தத் திட்டங்களையோ மனோபாவங்களையோ 1956 இன் நாடாளுமன்றப் பதிவிலிருந்து பார்த்துத் தெரியலாம். இது அப்பொழுது வவுனியா நாடாளுமன்ற உறுப்பினர் அடங்காத் தமிழன் சுந்தரலிங்கத்துக்கும் பின்னால் ஜனாதிபதியாகிய ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும் இடையில் 19 ஜூலை 1956 இல் நடந்தது.

திரு.சுந்தரலிங்கம்:–

"பிழை விட வேண்டாம். பொலநறுவையின் கௌரவ உறுப்பினர் (சி.பி.டி.சில்வா) ஜனநாயகத்தைப் பற்றிப் பேசியிருந்தார். ஆனால் அவர் ஜனநாயகத்தைப் பற்றி புத்தகங்கள் படிக்க வேண்டும். அவர் அடிப்படை உரிமைகள் பிரகடனத்தை ( Declaration of Fundamental Rights ) படிக்க வேண்டும்.

ஜனநாயகம் என்பது இதுதான். அதற்கு மேல் அதற்கு விளக்கம் தேவையில்லை. நீங்கள் உதவி சபாநாயகராக (அப்போது ஜனாப். இஸ்மாயில்) இருக்கிறீர்கள். ஆயினும் தலையில் முஸ்லிம்களுக்கு உரித்தான தொப்பியை (Fez ) அணிந்திருக்கிறீர்கள். எங்களில் ஐந்து பேர் சேர்ந்து அல்லது இந்த அவையிலிருக்கிற எல்லோரும் கூட சேர்ந்து வாக்களித்து, உதவி சபாநாயகர் தனது தொப்பியை இங்கு அணியக்கூடாது என்று தீர்மானம் நிறை



பின்னாளில் சபாநாயகரான எச்.எஸ்.இஸ்மாயில்



அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம்

வேற்ற முடியாது.

திரு.ஜெயவர்த்தனா : ஏன் முடியாது? அவர்களால் அதைச் செய்ய முடியும்.

திரு சுந்தரலிங்கம்: ஆ! நீங்கள் அப்படிச் செய்யலாம் என்கிறீர்களா? ஆ! அதுதான் ஜனநாயகத்தைப் பற்றி நீங்கள் அறிந்து வைத்தது?அதாவது இந்த அவையின் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் கூற்றுப்படி அவரது ஜனநாயக மரபில் இனிமேல் தொப்பியை நீங்கள் அணியக்கூடாது எனக் கேட்கலாம்.

இதனை நாங்கள் சபையின் குறிப்புகளில் (Hansard இல்) பதிந்து கொள்ள வேண்டும். என்னுடைய நண்பர்கள் தங்களுடைய பெரும்பான்மையால் நான் திருநீறு அணிந்து இந்தச் சபைக்கு வரக்கூடாது என்று தீர்மானம் எடுத்தால் நான் எனது முஷ்டியைத் தான் அவர்களுக்குப் பாவிப்பேன். அதைப்பற்றி எந்த விதமான மாற்று யோசனையும் வேண்டாம். உப சபாநாயகரே நான் இந்த சபையில் மனிதனின் அடிப்படை உரிமைகளை வாசித்திருக்கிறேன். ஜனநாயகத்தின் உண்மையான பெயரில் ஜனநாயகமற்ற எதனையும் செய்ய முடியாது. உதாரணத்துக்கு சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளை மறுக்கவோ மீறவோ முடியாது. அப்படியான மீறல்கள் நடந்த உடனேயே சிறுபான்மையினர் தங்களிடமிருக்கும் எந்த ஆயுதங்களையும் பாவித்து அந்த நிலைமையை மாற்றுவதற்கு செயல்படலாம். இந்த நாடாளுமன்றத்தில் அடிக்கடி இந்த அடிப்படை தத்துவத்தைச் சுட்டிக் காட்டியிருக்கின்றேன்.

ஜனநாயகம் என்பது எத்தனை தலைகள் இருக்கின்றன என கணக்கெடுப்பதுதான். அதனைத் தான் செய்ய வேண்டும் என சில வரம்புகளுக்கிடையே அது பணிக்கிறது. அதேசமயம் அந்த வரம்புகளுக்கு அப்பால் சில தலைகளை உடைப்பது என்பதும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

மொழிப் பிரச்சினையால் இதுவரை 2001 தலைகள் உடைபட்டுள்ளன. பள்ளிக்கூடங்கள் தேசியமாக்கப்படுவதில் மூன்று தலைகள் உடைக்கப்பட்டுள்ளன. சில மாதங்களுக்கு முன் கௌரவ ஜயவர்த்தனவே நான் இங்கு சொல்லும் இந்த விளக்கத்தைப் பல வார்த்தைகளில் விளங்கப்படுத்தியிருந்தார். உப சபாநாயகராகிய நீங்களும் மற்றைய சபையின் அங்கத்துவர்களும் இதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

(வளரும்)